


உதய தாரகை
கவிஞர் நாவற்குழியூர்
கி. இலட்சுமணன்



குற்றங்கள் அற்றது வாழ்க்கையே அல்ல
குறுக்கதை நல்லவன் என்று ஊர் சொல்ல
பற்றுக்கள் அனைத்தையும் ஒழித்திடு மெல்ல
பாவங்கள் சேராத வாழ்க்கையைக் கொள்ள!

தெணியான்.

# உதய தாரகை

(கவிதைத் தொகுதி)

ஆசிரியர்

**கவிஞர் நாவற்குழியூர் கி.இலட்சுமணன்**

பரு. ஆதார வைத்தியசாலை

## இரண்டாம் பாகம்

வெளியீடு

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கலை இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம்

2002

| | |
|---|---|
| கவிதை நூலின் பெயர் | : உதயதாரகை |
| நூலாசிரியர் | : கி.இலட்சுமணன்<br>ஐந்து வீட்டுத் திட்டம்<br>நாவற்குழி |
| முதற் பதிப்பு | : ஐப்பசி 2002 |
| பதிப்புரிமை | : நூலாசிரியருக்கு |
| வெளியீடு | : தேசிய இளைஞர் சேவைகள் மன்ற<br>யாழ் கலை இலக்கிய வட்டம் |
| பக்கம் | : xiii+109 |
| அச்சுப்பதிப்பு | : எஸ்.ரி.பி கணனி நிறுவனம் |
| விலை | : 150.00 |

## ஆசியுரை

திரு இல்லம்
கரவெட்டி
19.04.2002

ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் கடமைபுரியும் நாவற்குழியூர் திரு. இலட்சுமணன் அபார படைப்பாற்றல் கொண்டவர் அவரது முதல் வெளியீடு கல்வி அமைச்சினால் பரிசுப் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது முயற்சியின் காரணமாக இக்கவிதைத் தொகுப்பு வெளிவரவுள்ளது. இம்மலரும் கவிஞர் களிடையே சீர் விழிப்பை ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை ஆக்கியோன் ஓர் யாதார்த்தவாதி. சாதாரணமாக உலகியல் வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளை கவிதை வடிவம் கொடுத்து பிறரும் அதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் மிளிர்பவர். வளர்க அவரது முயற்சி, வாழ்த்துகிறேன் அவரை. வையகம் வருங்காலம் அவரைப் போற்ற வேண்டி அமைகிறேன்.

சி. கதிரவேற்பிள்ளை,
மா.வை அ. ஆதார வைத்தியாசாலை,
பருத்தித்துறை.
மந்திகை, புலோலி.

தே.இ சே.ம
யாழ்ப்பாணம்
2002.10.01
தேசிய இளைஞர் சேவைகள் மன்ற, யாழ் மாவட்ட உதவி இயக்குனரின்

## ஆசியுரை

உதயதாரகை விடிவுக்கு வரவுகூறும் வடிவம் வகுத்துப் பார்க்கில் இளைஞர்களின் கவி ஆற்றலின் வளர்ச்சிப் போக்கிற்குச் சான்றுபகரும் சின்னம் இச்சிறிய நூல். நூல் சிறியதாயினும் சிந்தனைகள் கருக்கொண்டு கவிதையான பாடல் வடிவங்கள் படிப்போரைப் பெரிதும் வியக்க வைப்பன. ஒவ்வொரு நூலகத் திலும் வைப்புச் சொத்தாக இருக்க வேண்டிய ஒரு ஆக்கப் படைப்புக் கூட. இலட்சுமணனின் இலட்சியங்கள் உரிமைக்கு அவன் கொடுக்கும் உரத்த சத்தங்கள் இந்நூலின் உயிர் முழக்கமாக உள்ளது. உள்ளத்தைத் தொடும் உணர்வு வடிவமான இப்படைப்பு வளரும் கவிஞனின் வளர்ச்சிக்கு வரைவிலக்கணம் வகுக்கும். வளர்க என்று இவனை இவன் எழுத்தை வாழ்த்து கின்றேன்.

தி. சீவதட்சணாமூர்த்தி,
உதவி இயக்குனர்,
தே.இ.சே.ம.,
யாழ்ப்பாணம்.

## வெளியீட்டுரை

*வசந்தத்தின் பாதையில் ..............................*

யாழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கலை இலக்கிய வட்டத்தின் நிர்வாகக்குழு அங்கத்தவர்களில் ஒருவரான திரு. கி. இலட்சுமணனின் எண்ணங்கள் உடைப்பெடுத்துப் பாய்ந்ததில் "உதயத் தாரகை" எழுகிறது. கலை இலக்கிய வட்டம் பெற்ற இரண்டாவது ஆண்குழந்தை இது.

சொக்க வைக்கும் சொற்கள்
வசீகரிக்கும் வரிகள்
வாலிப வார்த்தைகள்
கனவில் மிதக்க வைக்கும் கற்பனைகள்
கிளர்ச்சியூட்டி கிளுகிளுக்க வைக்கும் வர்ணனைகள் மூலம்
இன்னொரு புதிய கவிதைத் தொகுப்பு ஆகிறது.

அலங்கரிக்கப் புறப்பட்டவனையே அலங்கரித்து அனுப்பும் அற்புத நவசாதபடைப்பாக இதயத்தின் நாளங்கள் சுருதி சேர்க்கின்றது. எம்மினிய நாட்டின் அவலங்களையம் அவர் இதயத்தின் மெல்லிய துடிப்புக்களையும் எழுதுகோலாலும் இசைக்க முடியும் என்ற உண்மையை நிறுவித்துள்ளார்.

இக்கலை இலக்கிய வட்டத்தில் உதயத்தை தேடிய பாதையில் ஓர் உதய தாரகை கரங்களில் எட்டி இருப்பது பெரும் வெற்றியே. இதனை இட்டு எம்மன்றம் பெருஉவகை அடைகிறது.

இந்த வாலிப பூங்குயில் வசந்தத்தின் வீதியில வலம் வர வாழ்த்துகின்றேன்.

யாழ் கலை இலக்கிய
வட்டம்

அன்புடன்
கு. றஜீபன்
தலைவர்
கலை இலக்கிய வட்டம்.

# அணிந்துரை

*ஈழத்துக் கவிதை வானில் ஒளி வீசும் உதயதாரகை*

நாவற்குழியூர் கி. இலட்சுமணன் ஈழத்து இலக்கிய உலகம் இன்னும் முறையாக இனங்கண்டு கொள்ளாத ஒரு கவிஞர் இலக்கிய உலகுக்குப் புதியவர் மாத்திரமல்லாது, புதுமையானவராகவும் இவரை அவதானிக்க முடிகின்றது. பத்திரிகைகள் சஞ்சிகைகளிலே தமது ஆக்கங்களை இடம் பெறச் செய்து தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டாத ஒருவராக இன்று வரை காணப் படுகின்றார். இலக்கிய உறவுகளை வளர்த்துக் கொள்ளாத ஒருவராக வும் இருந்து வருகின்றார்.

தமது உள்ளத்தில் பெருகிவரும் கவிப்பெருக்கை அவ்வப்போது இவர் கவிதைகளாக வடித்து, தம்மோடு வைத்துக் கொள்வது இவருக்குரிய இயல்பு. அதேசமயம் தமது கவிதைகள் பற்றிய மிகுந்த நம்பிக்கையை மனதில் வளர்த்து வைத்துக் கொண்டிருக்கும் இக்கவிஞர், அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக நாவற்குழியூர் இலட்சுமணன் கவிதைகள் என்னும் ஒரு தொகுதி யினைச் சென்ற ஆண்டு [2001] நூல் வடிவில் வெளிக்கொண்டு வந்தார். அத்தொகுதியானது இக்கவிஞர் தமது கவிதைகள் பற்றி மனதில் கொண்டுள்ள நம்பிக்கை தவறான ஒன்றல்ல என்பதனை உணர்த்துவதாக வெளிப்பட்டு இருக்கின்றது.

அந்தத் தொகுதியினால் இவர் உள்ளத்தில் உருவான திடமான நம்பிக்கை, அடங்காத ஆர்வம் என்பன உதயதாரகை என்னும் இத்தொகுதி இத்துணைவிரைவில் இன்று வெளிவருவதற்கு காரணம் எனலாம். ஐம்பத்திரண்டு தலைப்புக்களிலான கவிதைகள் இத்தொகுதியிலே இடம்பெற்றுள்ளன. இந்தச் சமுதாயத்தின் பல கோணங்களிலும் இவர் பார்வைகள் சென்று அவைகள் யாவும் செழுமையான கவிதைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இன ஒடுக்குமுறை, யுத்தக் கொடுமைகள் சாதிய ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை, மூடப்பழக்க வழகங்கள் சீதனக் கொடுமை, காதல் எனப் பல கருப்பொருள்களைக் கொண்ட கவிதைகளை இத்தொகுதி யில் கண்டு கொள்ளலாம். இத்தொகுதியானது நிச்சியம் தனது

சிறப்பை எடுத்துச் சொல்லும்.

போரினால் தேசம் தனது ஆன்மாவை இழந்து அழிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் மனித சமுதாயம் ஆவலுடன் வேண்டி நிற்பது சமாதானம் ஒன்றுதான். அந்த சமாதானத்தினால் விளையக்கூடிய சுபீட்சமான வாழ்வை வரவேற்று போரின் கொடுமையை எடுத்துச் சொல்லுமிடத்து.

"மனிதம் வாழ்வதற்கு நல்லாட்சி தேவையே
மரணம் அது புரிந்தால் எதற்கிந்த ஆட்சியே!"

என வினா எழுப்புவதன் மூலம் சராசரி ஒவ்வொரு மனிதனையும் சிந்திக்கத் தூண்டுகின்றார்.

கவிஞர் இலட்சுமணன் அதர்மம் கண்டு சினத்து சீறும் ஒருவராக விளங்குகின்றார். சமூகத்தில் காணப்படும் கேடுகெட்ட மனிதர்களைக் கண்டு சீற்றங்கொண்டு நையாண்டி இழையோட இவ்வாறு பாடுகின்றார்.

"கேடு கெட்ட மனிதரைத்தான் கடவுள் காக்குமோ – தெய்வம்
கண்ணியமாய் வாழ்பவரைச் சேர்ந்து தாக்குமோ?
கோடுபோட்டு வாழ்ந்தவர்கள் கதையைக் கேளடா – அவர்
கோவணமும் பொல்லுந்தானே கண்ட வாழ்வடா!"

கவிஞர் இலட்சுமணன் வயதில் இளைவராக இருக்கின்றார். இவரது இளமை, இவருக்கு வாய்த்த வாழ்க்கை நிலை என்பன காதல் பற்றிய பாடல்களை அனுபவித்து உயிர்மூச்சோடு பாடும் வண்ணம் இவரைத் தூண்டுகின்றன. அதனால் கன்னியர் மேல் கொண்ட காதலை மீண்டும் மீண்டும் கவிதைகளாக பாட வேண்டி நேருகின்றது.

"சொர்க்கத்து மேனகையும் இவளைச்
சொந்தமென்றே வேண்டி நிற்பாள்
வெட்கத்தை விட்டே மன்மதன் தனக்கு
வேண்டுமிவள் என்றுரைப்பான்"

என மன்மதனையே சொக்கவைக்கும் பெண்ணின் அழகுபற்றி இவர்

விதந்து பேசுகின்றார்.

ஒரு படைப்பாளி தனது இலக்கியங்களில் எடுத்தாளும் உவமைகள் புதுமையானவைகளாக சூழலுக்கும் வாழ்வுக்கும் பொருத்தமானவைகளாக அமைத்தலே சிறப்பு அவ்வாறு அமையும் உவமைகளால் அந்த இலக்கியப்படைப்பு பொருட்தெளிவு இலக்கியச் சுவை, அழகு என்பன மிகுந்ததாக உயர்ந்து விளங்கும் அத்தகைய மேலான உவமையினை அன்புக்காதலி எண்ணும் கவிதையில் உதாரணமாக்க் கண்டு அனபவிக்கமுடிகிறது. காதலியாக இருக்கின்ற வளைச் சாதாரண மனித வாழ்வோடு இணைத்து முட்டை மங்சட்கருவடி நீ எனப் புதுமையாகப் பின்வரும் கவிதையில் உவமிக்கின்றார்.

“வானின் நிலவடி நீ – முட்டை
மஞ்சள் கருவடி நீ
ஊனில் உயிருளத்தில் - எல்லாம்
உறைந்து நிறபவளே

காதல் தரும் போதை மயக்கத்தில் தான் கவிதைபாடுவதாக ஒளிவுமறைவின்றிக் கூறும் கவிஞர் இலட்சுமணன் கண்களை மூடுவது கன்னியரைக் கனவில் காணப்தற்காகவே என வெட்கத்தை விட்டு தனது ஏக்கத்தை பின்வருமாறு கவிதையாகச் சொல்லுகின்றார்.

“காதலெனும் போதைக் கடலினில் மூழ்கிதான்
கவிதைகள் பாடுகின்றேன்.
கன்னியர் தனையெந்தன் கனவினிற் பார்த்திடக்
கண்களை மூடுகின்றேன்”

கவிஞர் இலட்சுமணனின் கவிதைவளம் அவருக்கு இயல்பானது இந்த வளத்தின் செழுமை மிகுந்த வீச்சுடன் வெளிப் படுகின்றது கவிதை உலகில் தடம் பதித்து வளர்ந்து வரும் ஓர் இளம் கவிஞன் பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற கவிஞர்களின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாது என்பதற்கு கவிஞர் இலட்சுமணன் விதிவிலக்கானவர் அல்லர்.

இன்றைய இளங்கவிஞர்கள் மத்தியில் இலட்சுமணன் தனித்துவமான கவிஞர் என்பதில் எந்த வித ஐயமும் இருக்க இயலாது. இவரிடத்தில் பொங்கி எழும் கவித்துவம் இருக்கிறது. அதனால் நல்ல கவிதைகள் பிறக்கின்றன. ஆனால் இவரது இலக்கிய உலகம் ஆழமும் அகற்சியும் பெறவேண்டும் சமூகம் சார்ந்த பார்வைத் தெளிவும் கூர்மையும் உருவாக வேண்டும். இன்றைய நவீன இலக்கிய – கவிதைப் போக்கினை இவர் இனங்கண்டு கொள்ள வேண்டும். பெண்ணினம் பற்றிக் கூறும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களில் இவருக்குக் கருத்தியற் தெளிவு ஏற்பட வேண்டும். இவைகளை இவர் கண்டடையும் போது தமிழிலக் கியத்தின் "உதயதாரகையாக" இந்த இலட்சுமணன் நிச்சயமாகப் பரிணமிப்பார்; பரினமிக்க வேண்டும் என்பதே எனது ஆவலும் ஆசியுமாகும்.

கலையருவி, - தெணியான்.
கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.
15/10/2002.

# ஆசிரியருரை

*என் இனிய நண்பர்களே!*

இலட்சிய வாழ்க்கை வாழ்ந்து மறைந்த மனிதர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நாம் சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்கள் பெரும் துன்ப துயரம் என்கின்ற கரடுமுரடான பாதை களைக் கடந்து தான் தமது இலட்சியப் பயணத்தின் இறுதி இலக்கை அடைந்திருக்கின்றார்கள் என்பது நன்கு புலனாகும். அரிச்சந்திரன், காந்திமகான், யேசுநாதர் ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களுடைய வாழ்க்கை வரலாறு எமக்கு புகட்டுகின்ற படிப்பினை இதுதான்.

சமுதாய நலனுக்காக எழுதுவதே எனது இலட்சியம் என்று நான் முடிவெடுத்து விட்ட பிறகு எனது எழுத்து வேகத்தைத் தடைப்படுத்துவதற்கு பற்பல இடையூறுகள் தோன்றிய போதிலும் எனது எழுத்து வண்டி குறைந்த வேகத்துடனே என்றாலும் தனது பிரயாணத்தைத் தொடரவே செய்கின்றது.

இலட்சியப் பயணம் என்றால் அதில் இடையூறுகள் உண்டு அதனை எதிர் நீச்சல் போடுவதிலேதான் வெற்றியுண்டு.

மற்றவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் எனக்கு வழிகாட்டியாக அமைகின்றன.

துணிகின்றேன் தொடர்கின்றேன்

தொடர்கின்ற பயணம் துன்ப துயரங்களையும் அச்சுறுத்தல் களையும் கண்டு தடைப்பட்டுவிடுமானால் அதன் பெயர் இலட்சியப் பயணம் அல்ல, அலட்சியப் பயணம்.

எனது ஒவ்வொரு நூல் வெளியீடும் நான் ஏறுவதற்குக் காலடி எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு படிக்கட்டுக்களே என நான் கருதுவதோடு ஏனையோரும் இதன் மூலம் ஏறி வர வழி சமைக்கிறேன். இதனால் எனது இலட்சியக் கனவு நனவாகின்றது. 10 .02 2002 அன்று எனது முதலாவது கவிதை தொகுதி நூல் வெளியிடப்பட்டது.

அதற்கு முன்பு என்னாற் கவிதை எழு முடியுமொன்று பலரால் நம்பவே முடியவில்லை எனது பெற்றோர் சகோதரர்கள் உட்பட .....................

யாரோ எழுதிய கவிதைகளை நான் திருடி வைத்துக் கொண்டு தங்களை ஏமாற்றவதாகவே கருதியனார்கள் சிலர்.

வேறு சிலர் நான் நீண்ட காலமாகத் தொகுத்து வைத்திருந்து கவிதைகளே இவைகள் என்றும் குறுகிய காலத்து ஆக்கங்கள் அல்ல என்றும் கூறினார்கள் .

எனது முதலாவது நூல் வெளியீட்டின் போது மதிப்பீட்டு ரையை ஆசிரியர் திரு. குப்பிளான் சண்முகம் அவர்களும் ஆசிரியர் திரு.ஆ. கந்தையா அவர்களும் நிகழ்த்தியிருந்தார்கள் வெளியீட்டு ரையை பிரபல நாவலாசிரியர் திரு.தெணியான் அவர்கள் நிகழ்த்தி யிருந்தார்.

அவர்களுடைய உரையைக் கேட்டதன் பின்னரே அக்கவிதைகள் என்னுடைய ஆக்கங்களே என்பதைப் பலரால் நம்ப முடிந்தது.

நம்பிக்கை அறற்வர்களுக்காகவே மற்றுமொரு நூல் வெளியீட்டை குறுகிய காலத்தில் வெளிக்கொணர வேண்டுமென அவாவுற்றேன்.

ஆறு மாத கால இடைவெளிக்குள் அதனை வெளிக்கொணர வேண்டுமெனப்து எனது ஆசை. எண்ணியது எல்லாமே நடந்து விடுகின்றனவா? நடந்து விட்டால் இறைவன் என்பவன் இல்லை யல்லவா? எனது எழத்துப் பணியில் பல இடையூறுகள் தோன்றின. காலங்கடந்தது. ஆறு மாதத்தில் என்றிருந்த எனது ஆசை ஒரு வருட பூர்த்தியில் தான் நிறைவு பெறுகின்றது.

இந்நூலிலே ஐம்பத்திரெண்டு தலைப்புகளிலே கவிதைகள் வரைந்துள்ளேன்.

தமிழ் முத்துக்களை ஒவ்வொன்றாகக் கோர்த்து ஆக்கிய கவி மாலையை உங்கள் கைகளில் ஒப்படைக்கின்றேன்.

இதனை அணிந்து அழகு பார்ப்பீர்கள் என்றே நம்புகின்றேன். ஞாபகமறதி என்ற நோய் என்னைச் சில சமயங்களில் முட்டாளாக்கி விடுவதுண்டு. எனது முதலாவது கவிதைத் தொகுதி நூல் வெளிவர வேண்டுமென்று ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவியவர்கள் பற்பலர்.

அவர்களிலே டாக்டர் திரு.மா. யோகேஸ்வரதேவரும் ஒருவர் நூல் வெளியீட்டின் போது வரவேற்புரை நிகழ்த்துவதிற் தொடங்கி இறுதியரை மிகுந்த உற்சாகத்தோடு செயலாற்றிய அப் பெருந்த கைக்கு நான் காட்டிய நன்றி எது தெரியுமா?

எனது ஆசிரிய உரையின் போது அவரைப்பற்றி நான் எதுவுமே கூறாமல் விட்டதுதான், காரணம் ஞாபகமறதி.

கற்றவரும், பண்பாளரும் ,பெருந்தன்மை மிகுந்தவருமாகிய டாக்டர். திரு. மா யோகேஸ்வரதேவர் இதுவரை அதனைப்பற்றிச் சிறிது கூடப் பொருட்படுத்தியதேயில்லை. ஆனால் நான் அதற்காக வெட்கப்பட்டேன் வேதனைப்பட்டேன் நன்றி மறப்பது நன்றன்று அல்லவா? நான் நன்றி மறக்கவில்லை. எனக்கு ஏற்பட்டது. ஞாபகமறதியே.

அதற்காக அவருடைய சேவையைப் பற்றி இங்கே சிறிது நினைவு கூருவது எனது கடமை என்று கருதுகின்றேன். அவருடைய சேவைக்கை காலங்கடந்தாவது எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரையை யாழ் தேவரயாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிபவரும் உபஅதிபரும் சிறந்த பேச்சாளரும், மனித நேயம் மிகுந்தவரும், இலக்கிய கர்த்தாக்களில் தலை சிறந்த நாவலாசிரியருமான திரு. தெணியான் அவர்கள் வழங்கியிருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வானம் நிலவால் அழகு பெறுகின்றது. வாழ்க்கை அறத்தாற் சிறப்புப் பெறுகின்றது. எனது நூலுக்கு திரு. தெணியான் அவர்களுடைய அணிந்துரையே அணிசெய்து சிறப்பிக்கின்றது.

எத்தனையோ அலுவலுக்கு மத்தியிலும் எனது கவிதைகளைச் சரிபார்த்துதவியதோடு அணிந்துரையும் எழுதித் தருவதற்கு முன்வந்த அப்பெருந்தகைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுதவிய ஞானபண்டித சேவா சுரபியும் பருத்தித்துறை மாவட்ட வைத்திய பொறுப்பதிகாரியுமாகிய திரு. சி.கதிரவேல்ப்பிள்ளை அவர்கட்கும் இன்னொரு ஆசியுரை வழங்கியுதவிய தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முகாமைத்துவ ஆலோசகர் திரு. தி. சிவதட்சணாமூர்த்தி அவர்கட்கும். வெளியீட்டுரை வழங்கியுதவிய தலைவரும் நண்பருமாகிய திரு. கு றஜீபன் அவர்கட்கும், எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்குத் தேவையான பண உதவியை வழங்கிய எனது பெற்றோர் கிட்ணன் - சின்னத் தங்கச்சி அவர்கட்கும். கவிதைகளை அச்சுவாகனம் ஏற்றுவதற்கு ஏற்ற முறையில் கவிதைகளை அச்செழுத்தில் எழுதி உதவிய எனது தமையனார் கி. வேலானந்தனுக்கும் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய *STP* கணனி நிறுவனத்தினருக்கும், இந்நூல் வெளிவருவதற்கு இன்னும் எத்தனையோ வகையில் உதவிகள் புரிந்த மருமகள் அ. கென்சிமேரி, நண்பன் கிரிதரன், ஐ. நாகமுத்தன் T. தியாகராஜன், க.அந்தோனி மற்றும் ஏனையோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விமர்சனங்கள் வரவேற்கப்படும்.

இங்ஙனம்

ஆசிரியன்.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சமாதானம் | 01 |
| 2. | நன்மையை நாடி | 02 |
| 3. | முதன் மொழி | 06 |
| 4. | இருள் நீங்கியது | 08 |
| 5. | நாடு போற்ற நட | 10 |
| 6. | விதியை மாற்றுவோம் | 11 |
| 7. | சதிச்செயல் தகுமா | 12 |
| 8. | ஊமைப் பெண் | 13 |
| 9. | சரித்திரத்தில் இடம்பெறு | 15 |
| 10. | நிலையற்ற செல்வம் | 17 |
| 11. | நாம் சிறந்தோங்க | 19 |
| 12. | எங்கள் தேசம் | 21 |
| 13. | பரவசங் காண்போம். | 22 |
| 14. | நீ வேண்டும் என்றது | 23 |
| 15. | அன்றும் இன்றும் | 25 |
| 16. | முதிபோரைப் பேணுவோம் | 29 |
| 17. | புகை எம் பகை | 30 |
| 18. | துறவு | 31 |
| 19. | பணமில்லார் பாடு | 33 |
| 20. | பெண்ணின் பெருமை | 34 |
| 21. | இப்பவே சாகட்டும் | 36 |
| 22. | தாயிற் சிறந்தொரு கோயிலில்லை | 38 |
| 23. | அவளே காப்பு | 40 |
| 24. | சமாதானம் சுமந்துவா சித்திரையே | 42 |
| 25. | சித்திரை 2002 | 44 |
| 26. | மே தினம் | 45 |
| 27. | கனவு பலிக்கும் | 47 |
| 29. | ஏற்றப் பாட்டு | 48 |
| 30. | நோக்கத்தில் உயர்ந்து நில் | 51 |
| 31. | சமதர்மம் | 55 |
| 32. | மாழ்பவர் தமிழ் மக்கள் | 58 |

33. குறிக்கோளொடு காதல் 61
34. பேராசை தவிர் 63
35. நீள நினைந்து 65
36. கோணல் வாழ்வு 68
37. விதியின் செயல் 70
38. மானத்தோடு வாழ 72
49. சுதந்திர மூச்சு 75
40. பாப்பாவுக்கு மாமா தரும் பாடல் 76
41. மயக்கந் தரும் பெண்மை 79
42. மீட்பர் யேசு 83
43. கடவுள்கள் 84
44. நவராசா 86
45. சுதந்திரம் வருமா 88
46. கட்டுப்பாடு அவசியம் 89
47. காதல் ஒரு வேதம் 93
48. கசிப்பினை ஒழிப்போம் 96
49. மனநீதி வேண்டும் 99
50. சாதிய வரலாறு 103
51. அன்புக் காதலி 109

# சமாதானம்

யுத்தத்தால் இரத்தத்தால் அன்பு வளருமா?
நாட்டிலே வீட்டிலே துன்பம் பெருகலாமா?

இளமை சுகம் மறந்து இரத்தம் சிந்துதே!
இனியும் போரெதற்கு இதயங் கெஞ்சுதே!

வளருந் தலைமுறைகள் வாழ்க்கை நரகமா?
வெடிகுண்டு நல்லதொரு நாட்டை ஆக்குமா?


தமிழும் சிங்களமும் தளைக்கப் பாடுவோம்
தணியாப் பகைவிடுத்தே நாட்டில் வாழுவோம்

இலங்கை நாடெமதே எதற்குப் போர்வெறி?
இனங்கள் ஒன்றுபட்டால் வாழ்கை உண்டறி

உயர்ந்த மாளிகைகள் தகர்த்திடும் போரினால்
ஏழையினம் பெருகும் யுத்தப் பேயினால்

புத்தர் இங்கெமக்குப் போதித்தது யுத்தமா?
சமாதானம் என்பதிங்கே வேம்பாய்க் கைக்குமா?

மனிதம் வாழ்வதற்கு நல்லாட்சி தேவையே!
மரணம் அதுபுரிந்தால் எதற்கிந்த ஆட்சியே?



## நன்மையை நாடி

பாட்டியர் சொன்ன
பழங்கதை யாவிலும்
புத்தியை நாட்டுவதோ? - இந்தப்
பாரை உயர்த்த
அறிவியல் கொண்டு நாம்
சிந்தனை கூட்டுவதோ? - தேர்ந்திடு
சிந்தனை கூட்டுவதோ?

யுத்தப் பிசாசிற்குச்
சோறிட்டு நீர்விட்டு
தேசத்தை வீழ்த்துவதோ? -அது
இரத்தம் விரும்பியே
எம்மை நெருங்கிடக்
கோபுரத் தேற்றுவதோ? -அதனை நாம்
கோபுரத் தேற்றுவதோ?

காதல் விரும்பிடும்
மாதர் துயருறக்
காளை நடப்பதுவோ? - ஒரு
கோடரிக் காம்பெனக்
காதல் மணந்தள்ளித்
தட்சணை கேட்பதுவோ? - ஆண்கள்வர
தட்சணை கேட்பதுவோ?

ஓதுஞ் சமயம்
ஒழுக்கமே தெய்வமாம்
உண்மை அறியீரோ? - நல்ல
பாதையறிந்து நடந்தால்
எமைப் பெரும்
பாதகஞ் சூழ்ந்திடுமோ? - எமைப் பெரும்
பாதகஞ் சூழ்ந்திடுமோ?

பஞ்சம் பசிகண்டு
பாமரர் ஏங்கிடப்
பாலா பிசேகங்களே - நல்ல
நெஞ்சங்கள் தெய்வ
கரிசனையிற் கொஞ்சம்
ஏழைக்கும் காட்டுங்களே-நம்
ஏழைக்கும் காட்டுங்களே!

மாடிமனை கட்டி
மானிடம் வாழ்ந்திட
மச்சுக் குடிசைகளே - உயர்
கோபுரங் கட்டிக்
குடிசைகள் தள்ளுவோம்
கூடவே வாருங்களே - தோழர்களே
கூடவே வாருங்களே!

வட்ட நிலாவிலே
வீடுசெய்வோம் எந்தன்
வார்த்தையைக் கேளுங்களே - அட
எட்டுத் திசைகளும்
எம்மைப் பணிந்திட
ஒன்று திரளுங்களே - அட
ஒன்று திரளுங்களே!

காடு திருத்திக்
கழனிகள் செய்தார்க்குக்
கால்வயிற்றுக் கஞ்சியோ? - தொழி
லாளர்கள் இன்றிநம்
தேசம் உயருமோ?
தோளை நிமிர்த்துங்களே-தோழர்களே
தோளை நிமிர்த்துங்களே!


சாதிமதம் பேசிச்
சாதித்த தென்னவோ?
தங்கத் தமிழினமே - இந்த
ஆதிக்கு நாதியும்
இல்லையென் றானதே
ஆயிரம் வேற்றுமையே - இனித்தேவை
ஒன்றெனும் ஒற்றுமையே!

வேடுவர் காலம்
ஒழிந்தது கல்வியால்
மேன்மைகள் காணுங்களே-ஒரு
கூட்டுக் குடும்பமென்றே

பிறர் கொள்ள
ஒற்றுமை பூணுங்களே-தமிழின
ஒற்றுமை பூணுங்களே!

சொந்த மொழியுண்டு
தேசம் நமக்கொன்று
செய்திட வேண்டாமோ? - அட
வந்தவர் எங்களை
வாட்டி வதைத்திடும்
வரலாறு காண்போமோ? - இனியும் நாம்
வரலாறு காண்போமோ?

ஜப்பானயல் சீனா
யாவுந் தொழில்மயம்
ஆனது கேட்டாயோ? - நீ
தப்பான வழிகள்
தன்னில் அலைந்தின்னும்
தறுதலை ஆவாயோ? - உயர்வின்றி
தறுதலை ஆவாயோ?



# முதன் மொழி

எங்கள் மொழி தமிழ்
ஏற்றமுள்ள மொழி
ஆதி திராவிடர்
தந்த மொழி

பங்கமிலா மொழி
பாரதி தாசன்
பாட்டியற்றித் தந்த
கன்னி மொழி!

செங்கரும்பை விடத்
தீஞ்சுவையைத் தரும்
திருக்குறட்பாக்களைத்
தந்த மொழி!

சிங்க நிகரான
தீரரைப் போர்க்களம்
செல்ல அறைந்திட்ட
வீர மொழி!

மங்காப் புகழுள
மாகாப்பி யங்களை
மேதினிக்குத் தந்த
தூய மொழி!

கன்னியர் காளையர்
காதலுறவாடக்
கவிதைகள் தீட்டிடும்
வண்ண மொழி!

தேசத்திலே உள்ள
சின்னத் தனங்களைத்
தூரத்திலே ஓட்ட
வல்ல மொழி!

தங்க மொழி எங்கள்
தாய் மொழியே தமிழ்
தரணியில் முதல்
வந்த மொழி!

சிங்களத் தீவினிற்
தலைநிமிர்ந்தே நிற்கும்
திராவிட மக்கள் நாம்
பேசும் மொழி!

# இருள் நீங்கியது

வீதி திறந்ததடா தாண்டவக்கோனே-கை
விலங்குகள் தெறித்ததடா தாண்டவக்கோனே
நீதி பிறந்ததடா தாண்டவக்கோனே - நம்
நெஞ்சினிருள் மாய்ந்ததடா தாண்டவக்கோனே!

விலைகள் கொடுத்ததுண்டு தாண்டவக்கோனே-இதில்
வேதனைகள் நாம் சுமந்தோம் தாண்டவக்கோனே
நிலமையின்று மாறியதே தாண்டவக்கோனே-நெஞ்சில்
நிம்மதியும் தோன்றுதடா தாண்டவக்கோனே!

அழிவுற்ற தேசமதைத் தாண்டவக்கோனே - இனி நாம்
அழகுறவே மாற்றிடுவோம் தாண்டவக்கோனே
குழியில் இருப்பவர்க்கும் தாண்டவக்கோனே-எங்கள்
குதூகலத்தைக் கூறிடடா தாண்டவக்கோனே!

வீரம் விளைந்த மண்ணிற் தாண்டவக்கோனே - இனி
விரோதிகள் தோன்றாரடா தாண்டவக்கோனே
போரும் மறைந்ததடா தாண்டவக்கோனே - நாட்டில்
புத்தொளியும் தோன்றுதடா தாண்டவக்கோனே!

உதய தாரகையும் தாண்டவக்கோனே - விண்ணில்
ஒளிபெற்றுத் தோன்றுதடா தாண்டவக்கோனே
இதய தாரகையைத் தாண்டவக்கோனே - இனிநாம்
அணைத்து இன்பம் காண்பமடா தாண்டவக்கோனே!

சின்னக் குழந்தையொடு தாண்டவக்கோனே - மக்கள்
தனையும் அழைத்துவந்து தாண்டவக்கோனே
தின்ன இனிப்புகளும் தாண்டவக்கோனே - கொடுத்து
சந்தோசம் கொண்டாடிடவா தாண்டவக்கோனே!



## நாடு போற்ற நட

முடிந்துவிடும் முடிந்துவிடும் வாழ்வு - அதற்குள்
முன்னேறு முன்னேறு புவிமீது
இடையிலெழுந் தடைகள்பல நூறு - அதை
எதிர்நீச்சல் போடு விழிப்போடு!

அறிவுபெறு அறிவுபெறு முந்து - உனை
ஒடுக்கச்சிலர் காத்திருப்பார் இங்கு
திறமையினை வெளிக்கொணர்வாய் நம்பி - புவிச்
செல்வமெல்லாம் உனையடையுந் தம்பி!

ஆடைபாதி ஆட்பாதி அன்றோ-அதை
அலட்சியமாய் எண்ணிடுதல் நன்றோ?
பீடைவரும் போகுமென எண்ணு - நாடு
போற்றுகின்ற காரியத்தைப் பண்ணு!

எறும்பினிடம் சுறுசுறுப்பைக் கற்று - சோம்பல்
என்றுமுனை அணுகாமல் எற்று
இறுமாப்புக் கொள்வதுவோ கேடு - அன்பு
இன்பநிலை சேர்க்குமதைச் சூடு!

பொறுமையொரு அழவினுக்கே கொள்ளு - நாம்
போராடி நலமடைந்தோம் உள்ளு
செருவென்றால் முனைமுகத்து நில்லு - என்றும்
சுதந்திரம்நம் உயிரென்று கொள்ளு!

# விதியை மாற்றுவோம்


புத்தகத்தில் உள்ளது போல் வாழ்க்கை அல்லடா - மனிதர்
போடும்பாதை கோணல் மாணல் ஆனதேயடா
மத்தளத்தைப் போலிருந்தால் வாழலாமடா - இங்கே
மனிதருக்கும் விலங்கினுக்கும் பேதம் ஏதடா?

எலும்பில்லாத நாக்கினாலே எதையும் பேசுவார்-சொந்த
அண்ணன் தங்கை அன்பிற்கூட கறையைப் பூசுவார்
குலங்களுக்குள் பகை வளர்க்கக் கோளும் மூட்டுவார்-எந்தக்
கொடுமையையும் அஞ்சிடாமற் செய்து காட்டுவார்!

வசதியாக வாழ்பவரில் வயிற்றெரிச்சல் கொள்ளும் - அவர்
வீழ்ச்சிபெற நேர்ந்ததெனிற் குதூகலத்தாற் துள்ளும்
விசமிகளாய் வாழ்பவர்க்கும் விடிகிறதே தேசம் - நல்லலோர்
வாழ்க்கையிலே தானே வந்து சூழ்கிறது மோசம்!

கேடுகெட்ட மனிதரைத்தான் கடவுள் காக்குமோ? - தெய்வம்
கண்ணியமாய் வாழ்பவரைச் சேர்ந்து தாக்குமோ?
கோடுபோட்டு வாழ்ந்தவர்கள் கதையைக் கேளடா - அவர்
கோவணமும் பொல்லுந்தானே கண்ட வாழ்வடா!

விரக்தியினால் மனமுடைந்து வாழ்வதுதான் வாழ்வா - தேச
விதியை நாம் மாற்றிடுவோம் விண்ணதிர வாடா
கரத்தினிலே ஆயுதத்தைத் தூக்குநிமிர் போடா - எந்தக்
காலத்திலும் துன்பமெமை இனியணுகக் கூடா!



## சதிச்செயல் தகுமா?

நிலைதடுமாறும் உலகத்தில் நாங்கள்
நம்புவதெதையாமோ? - இங்கே
சிலைகளைப் போலே மனிதர்கள் வாழ்ந்தால்
தேசத்தில் உயர்வோமோ? - நாங்கள்
தேசத்தில் உயர்வோமோ?

உழைப்பவர் தம்மை அடிமையென் றாக்கும்
உலுத்தரை விடலாமோ - ஏழை
பிழைப்பினில் மண்ணைப் போடுவோர் தம்மை
புதைத்திடல் பிழையாமோ? - மண்ணிற்
புதைத்திடல் பிழையாமோ?

உதிரத்தைச் சிந்தும் உத்தமர் புகழை
உரைத்திட மறுபபோமோ?-நாட்டில்
பார்களைப் போற்றிப் பந்தியில் வைத்துப்
பாட்டுக்கள் புனைவோமோ? -வாழ்த்துப்
பாட்டுக்கள் புனைவோமோ?

பெண்ணின் கனவுகள் பலித்திட எமையாள்
பரமன் அருளாளோ? - நாம்
உண்ணும் பொருட்களைப் பதுக்கும் மூடரை
எமனும் அறியானோ? - இங்கே
எமனும் அறியானோ?

பூமியின் அறிஞர் பெருமக்களே இந்தப்
பதுமையைப் பாருங்கள் - இங்கே
சாமியின் பேராற் சதிச்செயல் வளர்வது
தகுமோ கூறுங்கள் - இனியும்
தகுமோ கூறுங்கள்?



## ஊமைப் பெண்

பெற்று வளர்த்தவர்
பேசாதிருக்கிறார்
பேதை மனது
தவிக்குதடி!


கற்றவள் என்னையும்
கைப்பிடிக்க ஒரு
காதலன் வந்திடக்
காணமடி!

மற்றவர் வாழ்ந்திட
மாதுஎன் உளளமோ
மாபெரும் ஆசையில்
மூழ்குதடி!

நற்றவம் செய்யாத
நாமெல்லாம் பூமியில்
நல்வாழ்வு வாழ்ந்திட
லாகுமோடி?

குற்ற மிழைத்திடக்
கூடு மெனினும்
குலப்பழி வந்தெமைச்
சேருமடி!

கற்புத் தவறாத
கன்னியாய்ச் செத்திடக்
கொஞ்ச விசமேனுந்
தாருமடி!



## சரித்திரத்தில் இடம்பெறு

சிந்தனைத் துளிகளைக் கடலெனப் பெருக்கு
தேசத்தின் நலனுக்காய் உடலினை உருக்கு
மந்தையாய் வாழ்வதில் நலமென்ன இருக்கு?
மாபெரும் பகைவரில் விரைந்ததைக் கருக்கு!


வாழ்க்கையை ஒருமுறை வாழ்ந்துதான் பாரு
வருவது அனைத்துமே துன்பமா கூறு?
ஏழ்மையா? உழைத்திடு இலையெனிற் கேடு
உயர்வுகள் வரும்வர அடக்கத்தை நாடு!

மாபெரும் நிலமிதில் வாழ்ந்தவர் கோடி
மிருகமாய் மனிதராய்த் தெய்வமென்றாகி
சாப்புரஞ் சென்றதே சரித்திரச் சேதி
சரித்திரத் திடம்பெற மரித்திடித் தேதி!

குற்றங்கள் அற்றது வாழ்க்கையே அல்ல
குறுக்கதை நல்லவன் என்று ஊர் சொல்ல
பற்றுக்கள் அனைத்தையும் ஒழித்திடு மெல்ல
பாவங்கள் சேராத வாழ்க்கையைக் கொள்ள!

விழிகளில் வழிந்திடும் நீரினைத் துடைத்து
விண்ணிலும் கூட நீ சரித்திரம் படைத்து
மொழிகளில், தமிழ்மொழி முதலென உணர்த்து
மாதர்கள் உன்னிரு விழியென இணைத்து!

கோபமே பாவமாம் கேட்டதென் காது
கொடுமைக்குத் தலைசாயும் மனிதனே சாது
ஆபத்தைச் சமாளிக்க எதிர்த்தாக்குப் போடு
இல்லையேல் அவ்விடம் விட்டு நீ ஓடு!



## நிலையற்ற செல்வம்

வெளிநாடு சென்றவர்கள்
விலையுயர் பொருள் கொணர்ந்து
களியாட்டம் போடு றாரடி - சகியே
களியாட்டம் போடு றாரடி!

பாட்டுக்கள் கட்டு பவர்
பயனற்ற கூட்டமென்றே
நாட்டிலிவர் எண்ணு றாரடி - சகியே
நாட்டிலிவர் எண்ணுறாரடி!

கம்பனும் வள்ளு வனும்
காலத்தை வென்ற திங்கே
செம்பொனிற் படுத் துறங்கியா? - சகியே
செம்பொனிற் படுத் துறங்கியா?

செல்வத்தினால் மட்டும் நாங்கள்
தேடிடும் சுகம் கிட்டுமா?
கல்வியிங்கு ஆணிவேரடி - சகியே
கல்வியிங்கு ஆணிவேரடி!

வீடுமதில் கார் வசதி
வேண்டு மெனினும் இங்கே
கேடு அற்ற செல்வமேதடி? - சகியே
கல்வியொன்றே என்று கூறடி!

நிலையற்ற செல்வ மதை
நிறையவே பெற்ற தனால்
தலைக்கனம் கொள்கி றாரடி - சகியே
செல்வராட்டம் கொஞ்ச நாளடி!



## நாம் சிறந்தோங்க

உண்டு உறங்கிடும் காலமிதா? - காதல்
ஓங்க வளர்த்திடும் காலமிதா?
சண்டித் தனங்களும் வேண்டுவதா? - பெரும்
சாதனை ஏதும் இதிலுளதா?

கெட்டித் தனங்களைப் பேசுவதும் - கேடு
கெட்ட இனத்தோடு கூடுவதும்
திட்ட மிலாமலே வாழுவதும் - பல
சின்னத் தனங்களில் மூழ்குவதும்

கறுப்புப் பணத்தைப் புதைப்பதுவும் - அதைச்
கறையான்கள் உண்ணக் கொடுப்பதுவும்
செருப்பைத் தலையிற் சுமப்பதுவும் - இன்று
தேசத்தில் ஏற்புடையச் செய்கைகளோ?

தங்கத்தைச் சேர்த்திடும் ஆசையினால் பலர்
சாப்பிடாமல் நகை தேடுவதும்
அங்கம் மெலிந்தின்று வாடுவதும் - எங்கள்
ஈழத்துப் பெண்களின் சாதனைகாண்

ஆடை குறையும் அலங்கோலம் - இன்று
ஈழத்துப் பெண்களது மோகம்
நாடி நரம்பெலாம் காதல் - வசப்படும்
நங்கையால் வேறெதும் கூடுவதோ?

நம்மினத் திற்றொரு நாடுவேண்டும் - அதில்
நாம் சிறந்தோங்கிட வேண்டுமெனில்
இம்மியும் சும்மா இருந்திடாது நன்மை
ஏற்படக் காரியம் செய்திடணும்.



# எங்கள் தேசம்

ஈழம் ஈழம் ஈழமிது
எங்கள் தேசமே - தமிழ்
இனத்தை யாளப் பிறர் நினைத்தான்
சூழும் மோசமே!

தமிழுணர்வு பொங்கி விட்ட (து)
எங்கள் மண்ணிலே இனித்
தடுக்குப் பிள்ளை வீரங்கொண்டு
தாவும் விண்ணிலே

நாளை யிதை ஆளுவது
நம்மினந் தானே – மண்ணில்
நீளும் யுத்தமென்று சிலர்
எண்ணுதல் வீணே!

யுத்தம் யுத்தம் என்றவர்கள்
பேச்சு நின்றது - இள
இரத்தங்களின் சுதந்திரத்தீ
மூச்சே வென்றது.

விடுதலைக்கு விலை கொடுத்த
வேங்கை வீரனே நாளை
கெடுதல்களை ஒழித் திடுவான்
எங்கள் நாட்டிலே!

# பரவசம் காண்போம்

பூமிக்கு வண்ணங்கள் பூசுங்கடி - அதில்
பூங்காக்களை உண்டு பண்ணுங்கடி
தாமரைகள் வாழத் தண்மை - மிகுந்திட்ட
தங்கத் தடாகங்கள் ஆக்குங்கடி!

காற்றை உதவிக் கழையுங்கடி மலர்க்
கந்தத்தினை அதிற் சேருங்கடி
ஏற்ற இறக்கங்கள் இல்லாச் சமத்துவ
இனமொன்றைப் பூமியிற் சமையுங்கடி!

மின்னல் ஒளி ஏந்தி வாருங்கடி இந்த
மேதினிக்கு விளக்கேற்றுங்கடி
கன்னல் பிழிந்திட்ட சாற்றினைப் போல் - சுவை
காதல் கனி மொழி பேசுங்கடி!

பாட்டுக் கலந்திட வேணுமடி நாட்டைப்
பச்சைப் பசேலெனக் காணுங்கடி
தோட்டந் துரவெலாம் துள்ளிக்குதித் தெழில்
தோகை மயிலென அடுங்கடி!

சிந்தை சிறந்து சிறுமைகளைப் போக்கி
செல்வந்தனை மிகச் சேகரித்தே
பந்தடித் தாடிப் பரவசமாய் - நாங்கள்
பாரினில் வாழ்ந்திட வாருங்கடி!

## நீ வேண்டும் என்றது.

ரம்பைதான் இவளோ? மன்மதன்
ரதிதேவி தான் இவளோ?
செம்பவளச் கன்னங்கள் கொண்ட
செந்தாமரை மல ரிவளோ?
அம்மனின் பொற் சிலையோ ரவிவர்மா
எழுதாத கலை வடிவோ?
செப்பொன் சிற்பி தன்கையாற்
செய்துதந்த அட்டி கையோ?

இளமை இவளுக்கென்றே
இறைவன் தந்த நன்கொடையோ?
அழகன்பு இவை யிரண்டும்
ஈன்றெடுத்த திவள் தானோ?
தெளிந்த அமுது பெண்ணாய்த்
தோன்றியது எவ் விதமோ?
பழகுதமிழ் கொண்டிவளை நானும்
பாப்புனைய வல்ல வனோ?

சொர்க்கத்து மேனகையும் இவளைச்
சொந்தமென்றே வேண்டி நிற்பாள்
வெட்கத்தை விட்டே மன்மதன் தனக்கு
வேண்டுமிவள் என் றுரைப்பான்
அர்த்த ராத்திரிக்கும் குளிர்
ஒளி கொடுக்கும் வெண் நிலவு அந்த
நிர்மல நிலவு எனைப் பார்த்து
நீவேண்டும் என்ற துவே

## அன்றும் இன்றும்

சுற்றுகின்ற பூமிதன்னில் சிந்தனை வளர்ச்சியின்றித்
தோன்றிவிட்ட தொன்மைக்குடி நாமே - இன்றியற்கைச்
சூழலை நாம் வெற்றி கொண்டோமே
கற்றிடாத மாந்தரன்று காடுகளிலே விலங்காய்க்
கற்குகையில் வாழ்ந்தகதை கேளும் இன்றுநாம்
காலமதை வென்ற நிலை பாரும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலமதில் வந்த குடி
கருத்தொன்றி வந்த நிலை பாரும் - இன்றுநாம்
கலைஞானம் பெற்றவர்களாகும்.
பல்விதமாம் சாஸ்த்திரங்கள் பூமியிலே நாம்பயின்றும்
புத்ததானே சுத்தம் பெறவில்லை - இன்னும் நம்முள்
பகைவிடுத்து வாழாதாராற் தொல்லை.

ஓசைச் சீரறிந்த எங்கள் மனிதகுலம்
பேசுதற்கு அன்றே கற்றுக் கொண்டான் - அன்றவன்
ஒன்று ஒன்றையா வெட்டிக் கொன்றான்
ஆசை மேலிட்டால் இன்று நாம் புரிவதென்ன?
ஆளுக்கான் பகைமை அண்டை அதனாலிங்கு
இறக்குமதி செய்தோம் வெடிகுண்டை.

கல்லுரசித் தீயறிந்த காலமொன்று உண்டுநாம்
நல்லறிவு பெற்றதிந்தக் காலம் - இதனை நாம்
நன்கறிந்து கொண்டுவிடல் வேணும்
எல்லையிலா வளர்ச்சியினை ஏணியின்றித்தொட்டபின்பும்
ஏழையினம் வாழ்கிறதே கேடு - ஏழ்மை
ஒழிந்தாற்தான் உருப்படுமெம் நாடு

சிந்து வெளி ஹரப்பா, மொகஞ்சதாரோ, எகிப்த்து
தந்ததொரு நாகரிக முண்டு - அறிவாய்
சாதி நிலை தோன்றவில்லை அன்று
மந்தைகள் போல் இன்னும் நாம் மனிதருக்குள்ளே பிரிவை
மிகவுயர்த்திப் பார்ப்பதுதான் மோசம் - இதை
விடுத்தால் நம்மினம் கொள்ளும் நேசம்!

குகைகளிலே வாழ்ந்த இனம் கோபுரங்கள் கண்டபின்பும்
கொடுஞ் செயல்கள் மறவில்லை ஏனோ? - நாங்கள்
கற்றுக் கொண்ட கல்வியிது தானோ?
பகைவிடுந்து வாழுகின்ற பாட மொன்றை நாம் பயில் வோம்
பாரில் நம்ம சாதி உயர்வாகும் - மனிதப்
பண்புவர மிருகருணம் போடும்.

ஆதாமும் ஏவாளும் ஆடையின்றி நின்ற காலம்
நீதான காலமது அல்ல - ஐயோவின்று
தமிழர் நிலை என்னவென்று சொல்ல?
கோதாகிப் போனவர்கள் கொள்கையை விடுத்தவர்கள்
குட்டக்குட்ட குனிவதெனும் பாடம் - இன்று நாம்
காண்பது தான் எங்களின் வேதம்.

வாள்வலியுந் தோள்வலியும் வேண்டிநின்ற கால மொன்று
வேட்டுவர்கள் காலமல்ல இன்று - இது
விஞ்ஞான காலமறி நன்று
நீள்புவியில் நாம்படைத்த நினைக்கவொண்ணாச் சாதனைகள்
ஊழ்வலியை மாற்றியது நன்கு நம்
உள்ளமதை உயர்த்தியதா இங்கு?

மாடுவண்டி தானே யன்று வாகனமாய்ப் பெற்றிருந்தோம்
வானவூர்தி கண்டதுண்டா அன்று? - நாம்
வசதிபெற்ற காலமடா இன்று
காடுவெட்டிப் பயிர்வளர்த்துக் கலையறிவு மிக வளர்த்த
கூட்டமிங்கு கேடுகெட்டுப் போச்சே - ஓ நாங்கள்
குரங்குகளில் வந்தவர்க ளாச்சே


இருபத்தொராம் நூற்றாண்டை எட்டிவிட்ட வேளையிலும்
இன்னுமிங்க சாதிமதச் சண்டை — அட
இறைவா இங்கேன்படைத்தாய் என்னை?
உருப்படாமல் எங்கள் நாடு இருப்பது இதனாலன்றோ
உயர்வு தாழ்வு கொண்டதுவா இரத்தம் - இங்கே.
இதை மாற்றத் தொடரட்டும் யுத்தம்!

வேடுவர்கள் இடையர்கள் வேளாண்மைக் காலமொரு
விஞ்ஞான காலமதும் கண்டோம் - எங்கள்
வளர்ச்சிநிலை படிப்படியாய்க் கொண்டோம்
கேட்டிலே வீழ்ச்சியுண்டு காலத்தால் வளர்ச்சி கண்டு
காலடியை நகர்த்தாமல் மனிதா- நாம்
கற்றவரென் றிருப்பதுதான் இனிதா?

சேரசோழ பாண்டியர்கள் செத்துவிட வில்லையின்னும்
சந்தையிலே வாழுகிறார் கேளு - அவர்
சாதனையை நெஞ்சிருத்தி வாழு
நேரமிதுநேரம் வரும் நாளைய தலைமுறைக்கு
நாம் சமைத்துவைத்ததென்ன? வாரும் - பல
நன்மைகளைக் கொண்டுவரப் போரும்!

சுந்தரத் தமிழினமே சிந்தனை பெருக்கு அதில்
மந்தைகள் நாம் என்ற நிலை மாறும் - தூய
மனங் கொண்டு ஏறும் விரைந்தேறும்
பந்தினைப்போற் காற்றடைத்த பையுடல்கள் செல்வதற்குள்
சொந்தமெனும் நாடுகண்டு செல்வோம் - அதில் நாம்
சகோதரர்கள் என்றநிலை கொள்வோம்!

சங்ககாலம் பொற்காலம் தமிழரது காலமெனில்
சிங்களத்தில் எங்கள் நிலை என்ன? – சேர்ந்து
செயற்படுவோம் போனபுகழ் மின்ன
தங்கைமாரே அன்புத் தம்பிமாரே பெரியோரே
கங்குலற வேண்டாமா? எழுக – எங்கள்
கஷ்டமெலாம் பூண்டோடு ஒழிய!



# முதியோரைப் பேணுவோம்

எமையீன்ற பெற்றோரே முதுமை பெற்றார்
ஈங்கிவர்கள் தானெமக்கு வாழ்வு தந்தார்
இமைபோல எமைக்காத்த அன்னை தந்தை
இளமைநிலை கடந்துவிட முதுமை கண்டோம்!

உழைத்துழைத்து ஓடாய்த் தேய்ந்த தெய்வம்
உதிரத்தை எமக்காகச் சொரிந்த தெய்வம்
களைத்துமெய் தளர்ந்திங்கே கினங்க ளாக
காப்பதுநம் கடமைமிகக் கடமை கண்டீர்!

நாம் வாழத் தமையிழந்த நல்லோ ரன்றோ
நாட்டிலுள்ள அனைத்தையுமே தந்தோ ரன்றோ
தாம் பெற்ற பலமிழந்து தளர்வு கண்டார்
சந்தோசத் துடனவரைக் காப்போம் நாமே!

நாளை நாம் முதியவராய் ஆதல் வேண்டும்
நலிவடைந்து படுக்கைநிலை அடையத் தோன்றும்
வேளையிது முதியோரைப் பேணி நாமும்
வரப்போகும் துயர்காப்போம் வாரீர் யாரும்!

எல்லோரும் முதியவராய் ஆவோ மென்று
அன்றந்தப் புத்தபிரான் சொன்னார் நன்று
நல்லோர் தீயோரென்ற நினைவு தள்ளி
நலிவுற்ற முதியோரைப் பேணல் வேண்டும்!

## புகை எம் பகை

புகையிலை தருவது சுருட்டு - புகை
பிடித்திடும் மாந்தர்கள் அறிவது இருட்டு
பகையிலை அவர்களில் எனக்கு - யார்க்கும்
பகையென மிளிர்வது புகைதரும் சுருட்டு

புற்றுநோய் தருவது புகையே – அதைப்
புகைத்திடும் மாந்தர்கள் ஈழத்தில் மிகையே
சற்றவர் சிந்திப்ப திலையே – கல்வி
சான்றவர் கூடத்தான் விடுகிறார் பிழையே!

சிறுசுகம் புகைப்பதில் உண்டு –மாந்தர்
தீங்கதில் உண்டென உணர்வது என்று?
அறுசுகந் தேறொர் இங்கு - யார்க்கும்
உடல் நலந் தேடுதல் மிகமிக நன்று!

நல்லொழுக்கம் இல்லா மாந்தர் - புகை
நாடுவார் இவர்களை நாடிடார் மாதர்
சொற்புத்தி தேடுவோர் யாவர்? - பெரியோர்
சொற்புத்தி கேளாதோர் இளமையில் வீவர்!

வெளிநாடு தரும் சிகரற்று - அதை
வேண்டிய அளவுக்கு எம்மிடை விற்று
களியாட்டம் போடுவோர் உண்டு - நம்
காசது போவதா உயிரையுங் கொண்டு?

## துறவு

காதல் காதல் என்றுதினம் ஓடுகின்ற மானிடா
காதலர்கள் பட்ட துன்பம் கற்றுணர்ந்து கொள்ளடா
மோதலோடு சாதலதில் மானிடர்க்கு உண்டடா
மாதராரை விட்டு நீயும் மேல்நிலைக்குச் செல்லடா!


தூதுசென்ற காதலின்று தூரதேசம் போனது
தோழமையின் பேரிற் காதல் ஆரம்பமே ஆகுது
மாதாக்ளோ தாம் நினைத்த மார்க்கங்களிற் போகுது!
மனமுடைந்து வாலிபர்கள் வேதனையில் வேகுது!

நாகரிக முள்ள காதல் நாளுக்கொன்று கொள்ளுது
நல்லவர்கள் தன்னைக்கூடத் தூதூவென்று தள்ளுது
சோககீதம் பாடுவதிற் சந்தோசமும் உள்ளதா?
தேவதாசைப் போல நாமும் வாவெது நல்லதா?

பாசம்பற் றறுத்தவர்கள் பாரிடத்து உண்டடா
பாவையர்களால் விளையும் பாவமென்று எண்ணடா
மோசம் சில பெண்ணதலால் மோகநிலை த்தள்ளடா
மாதருக்கு இவ்விடத்து மேன்மையென்ன சொல்லடா?

யுத்தங்களின் ஆரம்பமே யுவதிகளால் என்றறி
சித்தர்களிற் பட்டினத்தார் செப்பியது நல்வழி
புத்தனுக்குப் புத்திவந்து போனதுதான் எவ்வழி?
பக்தர்களாய் ஆகுவிடு பாவையரின் புன்நெறி!

அம்பிகாபதி திறமை அடங்கியது எவ்விடம்
அமராவதி என்னுமந்த அற்பமான மாதிடம்
தம்பிமார்களே உலகில் துறவு ஒன்றே மேலிடம்
தாய்க்குலத்தை விட்டாலுண்டு துன்பமற்ற நல்லிடம்!



# பணமில்லார் பாடு

பொன்னுண்டு மணியுண்டு பசிதீர்க்க உணவுண்டு
புடைவைகள் ஏராள முண்டு
கன்னியர் காளையர் காலுக்கும் செருப்புண்டு
காசுதான் கையிலே இல்லையில்லை!

கடிகார முண்டு கைச்செயினுண்டு போட்டிடக்
கண்ணுக்குக் கண்ணாடி உண்டு
குடையுண்டு தொப்பியுமுண்டு நாம் வாங்கிடக்
காசுதான் கையிலே இல்லையில்லை!

காணிகள் வாங்கலாம் வீடுகள் வாங்கலாம்
கார் வாங்கி ஊரெல்லாம் சுற்றவரலாம்
தோணிகளோடு மா கப்பல்பளுண்டுநம்
தேவைக்குக் காசுதான் இல்லையில்லை!

தேனுண்டு பாலுண்டு செங்கரும் பிங்குண்டு
தின்னக் கனிபல வுண்டு
சீனத்து விமானமும் ஈழத்திலுண்டு கைச்
செலவுக்கு காசுதான் இல்லையில்லை!

கதிரைகள் மேசைகள் உண்டுநாம் சென்றிடக்
கனரக வாகனம் உண்டு
புதிதாகப் பற்பல பொருள்களும் வாங்கலாம்
பணந்தானே கையிலே இல்லையில்லை!

## பெண்ணின் பெருமை

பெண்ணின் பெருமை கண்டு
புனைகிறேன் கவிதை ஒன்று
எண்ணிநீ பாராய் இங்கு
இக்குணம் பெண்மைக் குண்டு!


பெண்ணே படைத்தாள் இந்தப்
பூமியில் மனித ஜாதி
பெண்ணே அழிப்பாள் சினம்
பொங்கிடப் பகையை மோதி!

பொறுமையிற் பூமா தேவி
பெண்ணினம் அதிலும் ஓங்கி
வறுமையும் தாங்கும் சக்தி
மிக்கவள் இவளே சக்தி!

அன்புக்கு நிகர் இவளே
அன்னையும் பெண் ணவளே
துன்பத்தைச் சுமப்ப வளும்
தரணியிற் பெண் ணினமே!

வாழ்க்கையில் இன்பம் சேர்க்கும்
வந்தோரை விருந்தாய் ஏற்கும்
தாழவொன்று எம்மைச் சூழ்ந்தால்
தன்னுயிர் தந்து மீட்டும்!

கணவனைப் பொன்போற் போற்றும்
காலுக்குச் செருப்பு மாகும்
குணமெனும் குன்றி லேறும்
கோயிலிற் தெய்வ மாகும்!



# இப்பவே சாகட்டும்

ஏனெதற்கு நாம் வாழ்கிறோம் நாட்டிலே?
ஏற்றமென்ப தொன்றில்லை எம் வீட்டிலே
கூனுதற்கொரு கல்வியா? எம் மினம்
கொள்கை அற்ற விலங்குகள் ஆகுமோ?

வன்னி மாடுகள் போலவும் வாழலாம்
வாய்ப்பந்தலாலிவ் வுலகையும் ஆளலாம்
கன்னி மாரொடுங் கூத்துகள் போடலாம்
காலத்தை வென்ற ஞானியு மாகலாம்!

சொல்லுஞ் சொல்லிலும் தேசத்தை மாய்க்கலாம்
தேவராயும் நாம் பூமியில் வாழலாம்
வெல்லும் கட்சிக்கே வாக்குகள் போட்டிடும்
வேடதாரி களாயும் நாம் மாறலாம்!

உண்மை பேசவும் உத்தம னாகவும்
ஒழுக்கத் தோடென்றும் உயர்ந்துநாம் வாழவும்
திண்மை கொண்டிந்தத் தேசத்தை ஆளவும்
சீவன் யாவும் குதூசலங் கொள்ளவும்

எண்ண மிட்டனர் எம்மவர் ஆயினும்
இங்கு நாமதை ஏற்றதுண்டா? எதைப்
பண்ணி வைத்துளோம் பாரெமைப் போற்றவே?
பாடை ஏற்றுவோம் பயனற்ற இனத்தையே!

கொண்டுவா ஒரு கைத்துவக்கு சோம்பல்
கொண்டு வாழ்பவரை முதலிற் சுடு
உண்டெனில் உயர் வுள்ளவர் ஆகட்டும்
இல்லையேல் அவர் இப்பவே சாகட்டும்!



# தாயிற் சிறந்ததொரு கோயிலில்லை

கோயிலிலே தெய்வம்
குடியிருக்கப் பார்த்தோம்
வாயிருந்தும் அதுவொரு
வார்த்தை சொன்னதுண்டா?

எங்களது பசியினை
அறிந்து கோயிற் தெய்வம்
இங்கெமக்கு உணவூட்ட
எழுந்து வந்ததுண்டா?

அன்பு காட்டுந் தெய்வம்
ஆலயத்தில் உண்டோ?
துன்பமெமக் கென்றாற் கோயிற்
சிலை துடிப்பது துண்டா?

பெற்றெடுக்க வில்லையவை
பால்கொடுத்த தில்லை
உற்றதுயர் தீர்க்க அவை
ஓடிவந்த தில்லை!

உடையுடுத்து எம்மை யெலாம்
அழகுபார்க்குந் தெய்வம்
கடவுளெனக் கோயிலில்நாம்
கும்பிடுவோர் அல்ல!

தன்னலமே இல்லாத
தாய்மையடா தெய்வம்
அன்னையடா எம்மை யெலாம்
ஈன்றெடுத்த தெய்வம்!

தாயிற் சிறந்த தொரு
கோயிலெங்கு மில்லை
கோயிற் சிலைக ளென்றும்
தாய்மையாவதில்லை!




## அவளே காப்பு

சதையும் எலும்பும் கொண்டு இறைவன்
சமைத்து வைத்த தேகம் - இது
சமைத்து வைத்த தேகம்
சிதையில் ஒருநாள் எரிந்து இதுவும்
சாம்ப லாக மாறும் - உடற்
சரித்திரத்தைப் பாரும்!

கூட்டம் கூடி ஆட்டம் போடும்
காலம் ஒரு பாதி - இடு
காட்டு வாழ்வு மீதி
தேடிக் கொண்ட செல்வங் கூடத்
துணை வருவ தில்லை - அது
தேவன் வைத்த எல்லை!

சொர்க்க மென்றும் நரக மென்றும்
சொல்லி வைத்தார் ஏட்டில் - தக்க
தீர்ப்பு வரும் வீட்டில்
நற்கதிக்கு ஏறு வதே இங்கு
நாங்கள் செய்யுந் தொண்டு - மீறில்
நரக மங்கு உண்டு!

ஒன்பது வாய்ப் புண் அதற்குள்
ஊசலாடும் உயிர் - இது
இறைவ னிட்ட பயிர்
இன்ப துன்பம் அனைத்தும் இங்கே
இறைவன் தந்த தீர்ப்பு - வாழும்
எவர்க்கும் அவளே காப்பு!



## சமாதானம் சுமந்துவா சித்திரையே

சித்திரை எத்தனை வந்ததிங்கே?
சமாதானம் எமைவிட்டுப் போனதெங்கே?
நித்தமும் துயரமே எம்மினத்தில்
நிம்மதி கிடைக்குமா எம்மனதில்?

புத்திள வேனிற் சித்திரையே நீ
பிறந்திடச் சேருமா விடிவெமையே?
மெத்தநீ விரைகிறாய் வருவதெனில்
முடிமீது சமாதானம் சுமந்துமேவா!

மானிடங் குருதியில் மூழ்க வேண்டாம்
மங்கையர் வாழ்வக்காய் ஏங்க வேண்டாம்
பூனைகள் அடுப்பிலே தூங்கவேண்டாம்
பாமரர் கசிப்பினால் வீங்க வேண்டாம்
ஏனிங்கு நீவர விரும்புகின்றாய்?
இன்னல்கள் பலவுண்டு இவ்விடத்தே
மானத் தமிழர்கள் நல் வாழ்வுக்காய்
முதுகினிற் சமாதானம் சுமந்துமேவா!

சிதைந்த எம் தேசத்தைப் பார்ப்பதற்கே
சித்திரையே நீயும் விரைகின்றாயோ?
புதைகுழியில் உந்தன் உறவினரைப்
பார்த்திட ஆவலோ? ஈழமதில்

வதைபட உந்தன் தலையெழுத்தோ?
வசந்த காலத் தலைமகளே
கதையொன்று கேட்டிடு வருவதெனிற்
கரங்களிற் சமாதானம் சுமந்துவா!



## சித்திரை 2002

இலங்கையில் யுத்தம் போக்கி
உளங்களில் உவகை ஏற்றி
விலங்கையே சுமந்த எங்கள்
வாழ்க்கையில் ஒளியைப் பாய்ச்ச
சதங்கையோ டசையும் எங்கள்
சித்திரைப் பெண்ணே வாடா
அலங்கலோ டுன்னை நாங்கள்
அழைக்கிறோம் வருக வென்றே!

நகையொடு வருக இனி நாம்
நாட்டிலே அமைதி காப்போம்
பகையொடு ஏழ்மை போக்கி
பேரின்ப வாழ்வு காண்போம்
புகையில்லை பூசல் இல்லை
பொன்னான நாடி தென்றே
நரையொடு வாழ எங்கள்
சித்திரைப் பெண்ணே வாராய்!

வேட்டொலி மறைந்த பின்னும்
வருவதற் கேனோ அச்சம்?
கேட்டொலி மறைந்து எங்கள்
கனவுகள் பலித்து நல்ல
பாட்டொலி பிறக்கும் நாட்டில்
பொங்கலோ டழைக்கின்றோம் எம்
கூட்டொலி அழைப்பை ஏற்றுக்
குதூகலம் விளங்க வாராய்!


## மே தினம்

திரைகடல் ஓடியுந் திரவியந் தேடி
தேக உழைப்பினாற் பலனை நாடி
பெருமிதத் துடனே வாழ்ந்ததெம் சாதி
பாட்டாளி நாமே என்பதிங் குறுதி
கரமே எங்களின் ஆயுதம் சொந்தக்
காலில் நிற்பவர் தானே நம்மினம்
உரத்தை மதிக்கும் எம்மனம் காண்
உழைப்போர் தினமே எங்கும் மேதினம்!

காடுகள் அழிந்தது யாரினால்? நெற்
கழனிகள் பிறந்தது யாரினால்? பெரும்
வீடுகள் உயர்ந்ததும் யாரினால்? இங்கே
விஞ்ஞான நலன்கள் பெருகிய தெதனால்?
ஆடைகள் கிடைத்ததும் உழைப்பினா லன்றோ
உழைப்போர் பெருமை உணர்வது என்றோ?
சூடும் குளிரும் தாங்கியே உழைக்கும்
தொழிலாளர் எம்திரு நாள் மே தினமே!

ஜாரின் கொடுமையால் வெடித்தது புரட்சி
ரஷ்யத் தொழிலாளர் பெற்றனர் மகிழ்ச்சி
சேரும் என்றனர் நாடெலாம் உழைப்போர்
சேர்ந்தனர் அது சோசலிசத்தின் வெற்றி

கோரம் நிறைந்ததே ஜாரின் ஆட்சி
கண்டோம் மேதினம் அதற்கோர் சாட்சி
வாரும் உழைக்கும் வர்க்கமே இன்று
வஞ்சனை செத்தநாள் மகிழ்வோம் நன்று!



# கனவு பலிக்கும்.

ஈழம் எங்கள் தாய்நாடு - இதை
மறுக்கும் சிலரின் பொய்கேடு
வாழ்வாய் தமிழா இதனூடு - எமை
வாட்டுந் துயரை வென்றோட்டு!

உரிமை எமக்கு இங்கில்லை - அதை
இரந்து கேட்டுந் தரவில்லை
முரசைஅறைவாய் இன்றோடு - துயர்
முற்றும் அறுமே வேரோடு!

அகிம்சைப் போருந் தோற்றதடா - நம்
ஈழ மண்ணின் கதையிதடா
அகிலம் முழுதும் அகதியடா - உன்
அன்னை நாட்டைக் காத்திடடா!

பிறந்த மண்ணில் வாழ்வாயா - உன்
பெருமை கொன்றே தாழ்வாயா?
சிறந்த வாழ்வை நீதேடு - இன்
தமிழா நீயும் சீர்பாடு!

காலம் மாறும் கதைமாறும் - உன்
கனவும் பலிக்கும் தளராதே
கோலம் மாறும் குணம்மாறும் - நின்
சட்டத்திலே உள்ள ஓட்டைகள் அடைப்போம்
கொள்கை மாறக் கூடாதே!

## ஏற்றப் பாட்டு

சாகும் முன்னரே சரித்திரம் படைப்போம்
கட்டிடங்கள் வானைத் தொட்டிட அமைப்போம்
கேடுறு பகைவரின் கோட்டை உடைப்போம்
பட்டங்கள் பெற்றுப் பலமும் பெறுவோம்
பாட்டிலும் கூத்திலும் பண்பு சமைப்போம்
மட்டிலா இறைவனை மனதாற் துதிப்போம்
மாதா பிதாகுரு தன்னை மதிப்போம்!

குடிசைகள் என்பது இல்லா தொழிப்போம்
கடமை மறந்தவர் தன்னைப் பழிப்போம்
அடிமை இனமுண்டேல் அதனை அழிப்போம்
அனைவரும் சமமென்றே பாடிக் களிப்போம்
விடியலைத் தேடிநாம் வீறுடன் செல்வோம்
விதியெனும் கங்குலை மதியினால் வெல்வோம்
முடியிலா வேந்தராய் மண்ணிலே வாழ்வோம்
முதியவர் கற்றிடப் பள்ளிகள் செய்வோம்!

வித்தை பல கற்று விண்ணையும் வெல்வோம்
வீதியிற் சுதந்திர மாக நாம் செல்வோம்
உத்தமர் வாழ்க்கையை ஓங்கிடச் செய்வோம்
அநீதி புரிவோரைத் திருந்திடச் செய்வோம்
இத்தரையில் ஏழை என்பவர் யாருமே

இல்லா தொழிந்திட நல்வழி செய்வோம்
சுத்தம் விரும்புவோர் தெய்வமே என்போம்
சாதியைப் போற்றுவோர் தாழ்ந்தவர் என்போம்!

மானிட ஜாதிக்கு மட்டு மல்லாமல்
மண்ணுயிர் யாவைக்கும் நல்லாதே செய்வோம்
தேனிடவே வரும் செவ்வை மகளிரைத்
தெய்வ மகளாய் உயர்த்தியே வைப்போம்
கானிடையேயுங் கழனிகள் செய்வோம்
கன்னித் தமிழை உலகெங்கும் பெய்வோம்
தூணென நிற்குமோர் சந்ததி காண்போம்
தெய்வம் போற்றுதல் நித்தியம் கொள்வோம்!

இந்தியக் கலைஞருக் கிணையாக நிற்போம்
எம்திரு நாட்டிலே செல்வம் குவிப்போம்
சுந்தரத் தமிழிலே தேன்கவி செய்வோம்
தென்னை பனைவளம் தேங்கிடச் செய்வோம்
நிந்தையறும் படி நீநிலம் கொள்வோம்
நீலக்கடலை நமக்கென வெல்வோம்
விந்தைப் புவியைப் பந்தெனக் கொண்டு
சிந்தை சிறந்து தேசத்தில் வாழ்வோம்!




## சிறுவயதுத் திருமணம் தவிர்

திருமணம் என்பது
பெண்கலி பிடித்தவர்க்குச்
சிறப்பெனவே தோன்றும்!

சிலகாலஞ் செல்ல
சிறப்புகள் ஒழிந்து
வெறுப்புகளுந் தோன்றும்!

அதை முதலிலுணரும்
ஆண்மகன் அவனே
உண்மை அறிவாளி!



# நோக்கத்தில் உயர்ந்து நில்

தாயினால் வந்தநம் தேகமும் போகும்
தன்னலம் விட்டுநாம்
வாழுவோம் வாரும்
நோயினால் எத்தனை நம்மிடை சாயும்
நோக்கம் உயர்ந்திட
நம்மினம் வாழும்
சாயின் பிறர்க்கெனச் சாய்ந்திடு நீயும்
தியாகம் பெருகிடத்
தன்னலம் தேயும்
காயமெனும் இந்தக் கட்டையி னாலே
ஞாலம் புகழ்ந்திட
நல்லதைச் செய்வோம்!

விட்டுக் கொடுத்திடும் வாழ்க்கையை இங்கே
வேண்டச் சுயநலம்
வெந்திடும் இன்றே
தட்டிப் பறிப்பது தன்னல மாகும்
தன்னைப் பிறர்க்கெனத்
தந்திடல் தியாகம்
நட்டு வளர்த்திடும் கொட்டை மரமும்
நற்கனி யாவர்க்குந்
தந்துற வாரும்
அட்டையெனப் பிறர் செல்வ மனைத்தும்
உறிஞ்சி வாழ்வது
என்ன வாழ்வாகும்?


முந்தையர் எத்தனை விந்தைகள் செய்தார்?
முற்று முழுதாகத்
தன்னையே தந்தார்
சிந்தையில் நாமதை ஏற்றுவோம் இன்றே
சாவிலும் வாழ்வதைக்
காணலாம் இங்கே
தந்திரம் மாயங்கள் செய்து தாம்வாழும்
சமூகமே மண்ணில்
நீளுது பாரும்
நிந்தைச் செயல்களை நீட்டிட லாமோ?
நாட்டில் மிருகங்கள்
நம்மவ ராமோ?

செல்வ மிருக்கலாந் தேவைகள் வந்தால்
தந்து விடுவதும்
தியாகமே என்றார்
நல்லதைச் செய்வதால் நாடிங்கு வாழும்
நரிபோல் வாழ்ந்திடில்
தீமையே நீளும்
வல்லோர் பலரிங்கே வாழ்கிறார் யாவும்
வளைத்துப் போட்டிடத்
தியாகமே மாயும்
இல்லையெண்ணாத அக் கன்னன்போல் நாமும்
இருக்குங் காலமோ
என்றுரு வாகும்?

உடல்பொரு ளாவியை ஒக்கத் தருதல்
உண்மையாந் தியாகமென்
றுணர்ந்தினர் நூலோர்
கடலெனும் மனமதை வேண்டுவோம் இன்றே
காலங்கள் தோறும் நாம்
வாழ்ந்திட இங்கே
நடுங்கிய மயிலுக்குப் பேகன் மேலாடை
நல்கினன் தியாகியே
நாட்டுக்குத் தேவை
குடத்துள்ளே விளக்கேற்றும் குருடர்கள் நாமோ?
கொடுப்பதிற் களிகொள்ளும்
நாள் வருமாமோ?

புத்தனும் காந்தியும் செய்தது என்ன?
பாமரர்க்காய் வாழு
உன்புகழ் மின்ன
எத்தனை மானிடம் மண்ணிற் பிறந்தார்
இன்று அவரெங்கே
ஓடி மறைந்தார்?
செத்தவர் என்பவர் வாழ்ந்திட வேண்டும்
தேசம் அவர் புகழ்
சொல்லிட என்றும்
மெத்த வுயர்ந்ததாம் விட்டுக் கொடுத்தல்
மேல்நிலை வேண்டுவோர்
கீழ்நிலை நாடார்

நாட்டிற்காய்த் தன்னுடல் ஆவியைத் தந்து
ஞாலத் துயர்ந்தவர்
எத்தனை யுண்டு?
வீட்டுக்கென்றே பல வாறு உளன்று
வாழ்வை நரகமாய்
ஆக்கியோர் உண்டு
கேட்டுக் கெல்லாம் மூலம் ஆசை என்றார்கள்
கொடுத்து வாழ்ந்தவர்
ஞாலம் வென்றார்கள்
தேட்டந் திறந்திடத் தியாகத்து ஏற
தேசமே உன்புகழ்
செப்பி நிற்காதோ?



# சமதர்மம்

எந்த உலகிலும்
ஏழை பணக்காரன்
என்ற வருக்கமுண்டு - அதில்
பந்த பாசமெல்லாம்
பணத்திற்குப் பின்னாலே
போகும் வழக்கமுண்டு - என்றும்
போகும் வழக்கமுண்டு!

எத்தனை மானிடம்
மெத்த உழைத்தின்னும்
ஏற்றங்கள் கண்டதில்லை- இங்கு
சொத்துச் சுகமொரு
சாதிக்கெனில் மாற்று
சமதர்மம் என்றசொல்லை - அதில்
சங்கடம் ஏதுமில்லை!

ஏழையும் செல்வரும்
வேறுவேறாய் நின்று
உற்றபகை முடிக்க - ஒரு
போதும் உலகில்
உயர்வுக் கிடமில்லை
என்ற கதைபடிக்க - மாந்தர்
என்ற கதைபடிக்க!

மானிட ஜென்மத்தை
வேண்டிக் கொண்டுயாரும்
வந்து பிறப்பதில்லை - வந்து
சூழும் இரண்டையும்
ஏற்றுக் கொள்வோமது
தானிங்கு வாழுங்கலை - கொண்டால்
ஏனிங்கு துன்பநிலை?


வந்து பிறந்தவர்
அத்தனை பேரதும்
வாழ்க்கை சிறப்பதில்லை - இங்கே
நொந்தவர் உள்ளமும்
நாளை சீர்பெறலாம்
நம்பிக்கை ஒன்றேயெல்லை-இதிற்
சஞ்சலம் தேவையில்லை!

தேவை அனைத்தையும்
தேடிக் கொண்டவர்கள்
பூமியில் யாருமில்லை - பெரும்
செல்வ மிருப்போரும்
துயரத்தை வென்றிங்கு
நிம்மதி காண்பதில்லை- யாரும்
நிம்மதி காண்பதில்லை!

தாவும் மனங்களின்
தேவைகள் ஒன்றல்லப்
பேயாய் அலைந்திடுமே -பல
காயும் மனங்களும்
உண்டிந்தப் பூமியில்
கண்கள் அறியட்டுமே- நோக்கும்
கண்கள் அறியட்டுமே!

காட்டு மிராண்டிகள்
கூட்டத்தில் வெற்றியைக்
காலம் கொணர்ந்து தரும்-அவர்
சேட்டைகள் யாவையுந்
தெய்வத்திடந்தந்து
தூங்க அமைதிவரும்-நெஞ்சில்
தூங்க அமைதிவரும்!

கஷ்டப் படாமலே
வாழ்ந்தவர் யாரிங்கு?
கவலை போக்கிடுவோம்-நல்
அதிஸ்டம் வரும்வரை
உழைப்போம் என்கின்ற
உறுதி நாம் பெறுவோம்-மன
உறுதி நாம் பெறுவோம்!



# மாள்பவர் தமிழ் மக்கள்

சொல்லொணாக் கொடுமை இந்தத்
தேசத்தில் அனுபவித் தோம்
கல்லொக்கும் இதயந் தானும்
கேட்டிடக் கரையு மம்மா
இல்லார்க்கு உள்ளார் அன்று
இழைத்திட்ட கொடுமை கூட
சொல்லாதே என்று தங்கள்
செவிகளைப் பொத்து மம்மா!

தாய் மண்ணிற் காலை வைத்த
தரக்குறை வான மாந்தர்
பாயின்றித் தாயைக் கூடப்
படுக்கைக்கு இழுத்த செய்கை
வாய்விட்டுச் சொல்ல லாமோ?
வல்வினை இதுதா னொன்றோ?
பேயாட்சி செய்தாற் கூடப்
பரிவெம்மிற் காட்டு மன்றோ!

வீதியிற் போவோர் தம்மை
வீசாரணை என்று சொல்லி
பாதியில் வழி மறிப்பார்
பரலோகம் அனுப்பி வைப்பார்


நீதியில் லாமல் இந்த
        நிட்டூரம் புரிவார் கேட்க
நாதியில் லாத ராக
        நம்மின மிருந்தா ரம்மா!

வீட்டுக்கு வீடு சென்று
        விலைமாதைப் போலே தங்கள்
பாட்டுக்குப் பெண்கள் தன்னைப்
        புலியென்று கூட்டிச் செல்வார்
கூட்டுக்குள் பறாவைப் பூனை
        குதறாமல் விடுமா? பேர்
ஏட்டுக்கும் அடங்கா தந்த
        அநியாயச் செயல்கள் அம்மா!

பதுங்கு குழிகள் தோண்டி
        பாலர்கள் முதலாய்க் கொண்டு
ஒதுங்கியே வாழ்ந்த வாழ்க்கை
        இதயத்தைப் பிளக்கு மம்மா
பிதுங்கிடும் விழிகள் செல்கள்
        புறப்படும் ஓசை கேட்டால்
ததிங்கினத் தோமே போடும்
        தள்ளாத வயதுக் கால்கள்!

விழுந்ததும் செல் அப்பக்கம்
        வீறிட்டு அழுவோர் கூட்டம்
எழுந்துபோய்ப் பார்த்தால் அங்கே
        இரத்தமும் சதையுந் தோன்றும்
விழுந்தவர் தன்னைத் தூக்க
        வேறெவர் போனாற் கூட
அழுந்துவர் நிலத்தில் ஏவும்
        அடுத்தசெல் அவரைத் தாக்கும்!

கெலிவரும் வேட்டைக் தீர்க்கும்
　　　　கொஞ்ச நேரத்தில் பின்னே
பலியெனக் கென்று கூறிப்
　　　　பம்பரும் வானிற் தோன்றும்
புலிகளுக் கென்று குண்டைப்
　　　　பொழிவதோ மக்கள் மீதே
மலிவதோ கதறல் அங்கே
　　　　மாள்பவர் தமிழ் மக்கள்!



## குறிக்கோளொடு காதல்

மினிவசுவது வரவதிற் சிலர்
ஏறுவார் - ஆண்கள்
மங்கையர்கள் இருக்கு மிடத்தை
நாடுவார்
கனியவர் முகம் நாணிச்சிவக்க
நோக்குவார் - ஒரு
காதற் கதையின் ஆரம்பத்தை
ஆக்குவார்!

இருக்கைகளில் இருப்ப தற்கு
விரும்பிடார் - சனம்
ஏற ஏற நெரிசல் தன்னை
விரும்புவார்
நெருக்கத்திலே மங்கையர் மேல்
உரசுவார்- இதை
நற்குலத்துப் பெண்கள் உள்ளே
தூற்றுவார்!

நீண்டகாலம் வாழும் உண்மைக்
காதலும் - சில
நிமிடத்திலே பிரிந்து போடும்
காதலும்

காண்பதுண்டு எங்கள் நாட்டு
வருக்கத்தில் - சில
காதல் மலர் பூக்கிறதே
நெருக்கத்தில்!

கோயில் குளம் யாவிலுமே
காதலே - நற்
கொள்கை இல்லாச் சமூகம்
மண்மீதிலே
தேயுமொரு இனத்தை இந்த
மண்ணிலே - நாம்
திருத்துதற்கு வழி எதுவும் [redacted]ணலே!

கொள்கை அற்ற இனமெழுப்பும்
காதலா- ஈழம்
கேவலமாய்ப் போகப் புவி
நம்மையே - கொள்கை
ஏற்றிக் காதல் செய்வதுதான்
நன்மையே!

சினிமாவில் காதல் கண்டு
ஏங்குமோ? - நம்
சமூகநற் கொள்கை மண்ணிற்
தூங்குமோ?
மனிதத்தின் வாழ்வு என்று
ஒதுங்குமோ? - சனம்
மகான்களின் பாதை விட்டு
நீங்குமோ?



# பேராசை தவிர்

ஆசையின் பிடியிற் சிக்கி
ஆடிடும் மனிதர் யாரும்
பூசைகள் ஆவார் என்றும்
புலியென ஆகார் தம்பி
காசினி எங்கும் இதனாற்
குற்றங்கள் விளையக் க[illegible]ம்
மாசுறு மிகும் ஆசைகள்
மனிதமே விடுதல் நன்று!

உள்ளத்திற் பற்றைத் தூண்டும்
ஆடம்பர வாழ்வை வேண்டும்
பள்ளத்திற் தள்ளும் சுய
புத்தி பேதலிக்கச் செய்யும்
கள்ளத்தில் விருப்பந் தந்து
காதலில் நோக்கந் தந்து
உள்ளத்தைக் கெடுக்கும் ஆசை
ஓங்குதல் தீமை ஆகும்!

குரங்கெனத் தாவும் ஆசை
கொடுமைக்கு மூலம் ஆகும்
அரசினை அப கரிக்கும்
அடுத்தவன் மனைவி மீது

கரிசனை கொள்ளச் செய்யும்
காசையே பூசை செய்யும்
நரிசனம் என்ற பேரை
நாட்டிலே தோற்று விக்கும்!

புத்தரே சொன்னார் ஆசை
போக்கிட வேண்டு மென்று
கர்த்தரே வாழ்ந்து காட்டிக்
கதிமோட்சம் சென்ற துண்டு
சத்தியம் தர்மம் கொல்லும்
சொந்தத்தைப் பகைக்கச் சொல்லும்
உத்தம மான பேரை
ஊதாரி ஆக்கிச் செல்லும்!

குடிமைக்கு இழுக்குச் சேர்க்கும்
கொள்கையிற் பிசகச் செய்யும்
உடமைகள் விழியிற் பட்டால்
எனக்கெனக் கென்று சொல்லும்
கொடுமைகள் விழைவ தெல்லாம்
கூடிடும் ஆசை யாலே
அடிமையாய் மனிதன் இங்கே
இருப்பதும் அதனா லன்றோ!

ஆசையை வென்று ஞானி
ஆனவர் சிலபேர் உண்டு
ஆசையிற் தொங்கி மிருகம்
ஆகிறார் மனிதர் இங்கு
ஆசையே போபோ என்று
ஒதுங்கிடும் நல்லோர் எங்கு
ஆசையால் உலகம் ஒருநாள்
அழியுமென் றூது சங்கு!

# நீள நினைந்து

தீப்பிழம் பாகப் பூமி
திழ்ந்த தோர் காலம் அந்தச்
சீப்பழம் தண்மை பெற்றுச்
செக மென வந்த தாகும்
பூப்பழப் பாறை தன்னிற்
புயற்காற்று போத போத அந்த
மாபெரும் கற்கள் இங்கே
மண்ணெனச் சிதைந்த தன்றோ.

மழை வந்து கடல்கள் வந்து
மண்ணிலே புல் பூண்டுடென்னும்
தழைவந்து தருக்கள் வந்து
சாப்பிடக் காய்கனி கிழங்குகள்
விளைத்திட்ட காலம் மனிதர்
வந்துதித் 'திட்ட காலம்
பழங்கால மான் தாலே
பகுத்தறி வெழாத காலம்!

உயிரினந் தோன்றிற்று அது
எப்படி என்பீர்? சொல்வேன்
பயிரிலும் உயர்ந்தோர் தோற்றம்
பைபிளில் விளக்கம் காட்டும்

செயரிலா தோங்கி நிற்கும்
சைவமோர் விளக்கஞ் சொல்லும்
கயரிலா தறிவியல் இங்கு
குரங்கில் நம் தோற்ற மெங்கும்!

எப்படி வந்தா லென்ன
இங்கு நாம் தோன்றி விட்டோம்
செப்படி மொழி பண்பாடு
சமயமன் றிருந்ததா? இல்லை
அப்படி அன்று எம்மோர்
அறிவிலா திருந்தார் இன்று
எப்படி ஈங்கு நாங்கள்
அறிவியல் வளர்ச்சி பெற்றோம்!

மிருகத்தை வேட்டை யாடி
வாழ்ந்தவர் வேட ரானார்
மிருகத்தை வளர்த்து வாழ்ந்த
மனிதர்கள் இடைய ரானார்
மிருகத்தைப் பயிற்றி வாழ்ந்து
மிருகத்தை விலக்கி நாங்கள்
வேளாண்மைக் காலங் கண்டார்
விஞ்ஞான காலங் கண்டோம்!

விசையுறு கப்பல் கண்டோம்
விண்வெளிக் கலங்கள் கண்டோம்
திசையறி கருவி கண்டொம்
செகத்தையே வென்றோம் இன்று
பசையுறு வாழ்வு பெற்றோம்
பாரிளில் எல்லாம் பெற்றோம்
நசையறக் கூடி வாழும்
நற்குணம் நாங்கள் பெற்றோம்

ஒருவரை ஒருவர் தேடி
ஆண்பெண்ணாய் ஒன்று கூடி
இருவராய் மூவர் நால்வர்
எற்றினம் பெருகிற் றோடி
ஒருவரை ஒருவர் வெல்லும்
உணர்விலும் மனித ஜாதி
பெருகிடக் கண்டோம் ஈது
புவனத்தை வளர்க்கும் மோடி

நீளநாம் நினைத்து பார்த்தால்
நம்மின வளர்ச்சி தோன்றும்
ஆளநாம் நினைந்த பிண்டு
அகிலமே வியந்து பார்க்கும்
ஈழமே எம்தாய் நாடு
இதையெங்கள் கருத்திற் கொண்டு
வாழுவோம் வருங் காலத்தில்
வாழ்வோர்க்கும் நல்வழிகள் செய்தே

ஊழ்வினை எண்ணம் தோன்றில்
உதறிடு உலகில் என்றும்
வாழ்வியல் நலங்கள் ஓங்க
வழிசமை எமது நாட்டின்
தாழ்வினை அகற்று நெஞ்சிற்
துணிவு கொள் வறுமைச் சேற்றில்
ஆழ்ந்திட வேண்டாம் நீங்கள்
அணிதிரண்டாக்கம் செய்வீர்

## கோணல் வாழ்வு

புத்தனல்லக் காந்தி அல்லப்
பாரடா என்னைப்
புனித னென்று சொன்ன வர்கள்
யாரடா?
உத்தமர்கள் சென்ற பாதை
நேரடா காண்
ஆரம்பமே கோணல் எந்தன்
வாழ்வடா!

மனிதனாக வாழ நானும்
முயல்கின்றேன். - ஆசை
மண்ணில் என்னை உந்தித்தள்ள
அலைகின்றேன்.
தனிமையிலே வாழ வென்றே
முயல்கின்றேன் பல
தேவைகளும் எனக்கு முண்டு
அறிகின்றேன்.

காதல் வாழ்வு கசக்கவில்லை
இருப்பினும் நான்
கவிதையிலே மூழ்கு கின்றேன்
தினந்தினம்

பாதி வாழ்வு கடந்த தடா
இருப்பினும் புகழ்
படைத்திடவே எனது மனம்
நினைந்திடும்.

தேவைகளைக் குறைத்து விட்டேன்.
நிம்மதி எனைத்
தேடிவந்து சரணடைந்த
தென்றறி
பாவலனென் றாகி விட்டேன்.
தாழ்விலை – அட
பாசம் வைத்த மனைவிதானே
இங்கில்லை.

வேலையென்றும் வீடு சென்றும்
வாழ்வது என்
வாழ்க்கை என்றே ஆகியிங்கு
நீள்வது
நூலறுந்த பட்டம் எந்தன்
வாழ்வது எந்த
நாளில் என்னை இன்பமிங்கு
சூழ்வது?

தாக்குபவர் பலர் இருக்கச்
சிரிக்கின்றேன் நற்
தெய்வமெனக் கண்ணனையே
வரிக்கின்றேன்.
காக்குமவன் கரம் எனவே
நினைக்கின்றேன். உண்டு
கண்ணனென்ற தைரியத்தில்
மிதக்கின்றேன்.

## விதியின் செயல்

தாடி இல்லாத் தேவதாசு
நானடி விதி
தனிமையிலே விட்ட தென்னைக்
காணடி
பாடுகிறேன் சோக கீதம்
பாரடி எனைப்
பிரிந்து சென்று விட்டதுவும்
ஏனடி?

மாலையிட்டு மண முடித்தோம்
உள்ளடி எனை
மறந்திருக்க முடிந்த துண்டா
சொல்லடி
பாலைவனம் போன்ற வாழ்வு
ஏனடி - நீ
பறந்து வந்து என்னுடனே
சேரடி!

ஆலையிட்ட கரும்பு போல
ஆனதே மனம்
அழுவதற்குச் சில சமயம்
தோணுதே — எழிற்
சோலைக் குயில் தான் பிரிந்து
போனதே — அடி
தித்தித்த நல்வாழ்வு வேம்பு
ஆனதே!

வாழ்ந்த காலம் பாழ் நரகம்
ஆனதா – அடி
வெளியுலகு பார்க்கச் சென்ற
பெண்புறா - இது
சூழ்ந்த வர்களால் விளைந்த
தொல்லையா – உன்
துயரத்துக்கு மருந்து இங்கே
இல்லையா?

இளமை இரண்டும் துயரங்கொண்டு
நிற்பதா நாம்
அழுவதென்ற பாடம் இன்றும்
கற்பதா?
வளமையன்றோ பிரிதல் சேர்தல்
என்பது எந்த
வருடம் நாங்கள் சேர்ந்தொன்றாய்
வாழ்வது ?

ஏழைகளும் வாழ்வு பெற்றார்
என்நிலை பொருள்
இருந்த போதும் ஈழத்திலே
புன்நிலை
வாழவென நான் அழைத்தேன்
கன்னலை – அவன்
விரைந்து சென்று சாத்திவிட்டாள்
சன்னலை.

## மானத்தோடு வாழ

ஆடிடும் மயிலே என்பார்
அன்னத்தின் நடையே என்பார்
பாடியிடும் குயிலே என்பார்
பாவலர் கவியே என்பார்
கூடிடும் மானே என்பார்
கொஞ்சிடும் கிளியே என்பார்
தேடியே வண்டு மொய்க்கும்
செவ்விதழ் மலரே என்பார்.

தேனென்பார் தினையே என்பார்
திரவியக் கப்பல் என்பார்
ஊனென்பார் உயிரே என்பார்
உதயத்துக் கதிரே என்பார்
மீனென்பார் தித்திக்கும் நல்
மாங்கனிச் சாறே என்பார்
காகைத்தூடே நிற்கும்.
கற்பகத் தருவே என்பார்.

பால் மொழிப் பதுமை என்பார்
பசுந்தளிர்க் கொடி நீ என்பார்
சேல்விழி மாதே என்பார்
சுந்தரத் தோற்றம் என்பார்
கால வழி காந்தம் என்பார்
கார்குயிற் பூவே என்பார்
நூலிடைப் பெண்மை என்பார்
நிலமகள் நிலவே என்பார்.

மாம்பழக் கன்னம் நினது
மார்புகள் தெங்கிள் வண்ணம்
ஆம்பல்போல் வதனம் என்பார்
எழிலுக்கே அரசி என்பார்
பூம்பொழில் மகளே உன்போல்
பூமியிற் காணேனென்பார்.
வேம்பும் நின் பார்வை பட்டால்
வெல்லமாய் இனிக்கும் என்பார்.

சொர்க்கமே நீதான் என்பார்
துடியிடைப் பெண் நீ என்பார்
அர்த்தமே நீதான் என்பார்
ஒய்யாரப் பெண்மை என்பார்
வெட்கமே இன்றி ஆண்கள்
வெறுங்கதை அளப்பர் ஈற்றில்
சர்வமும் நீதான் என்றே
சுகப்பாடம் முடித்தும் வைப்பர்.

இயற்கையின் தேவன் அந்த
இன்பத்திற் துன்பம் வைப்பான்
துயர்க்கடல் மூழ்கப் பெண்ணைத்
தாய்மையென் றாக்கி நிற்பான்.
மயக்கமுந்தருபான் கயமை
மாதரார் நிலையைக் கண்டால்
தயக்கமே இன்றி நின்னைத்
தவிக்கவே விட்டுக் களர்வர்.

ஊராரும் வெறுப்பர் உன்னில்
உற்றாரும் பழியே சொல்வர்.
சீராக வளர்த்தால் இந்தச்
சிறுமைதான் வருமா? என்றே
காரணம் அளப்பர் பெற்றோர்
கடையென மிதிப்பர் நீயும்
ஆராய்வாய் அவ மானத்தால்
இறப்புக்கும் துணிவா யன்றோ.

எத்தகைய புகழ்ச்சி பேசி
ஏய்ப்பினும் ஆண்மைச் சாதி
அத்தகைய பேச்சில் உள்ள
அழத்தைப் புரிந்து நீயும்
சொத்தைகள் இவர்கள் என்றே
தூரத்தில் விலகி விட்டால்
மெத்தவுந் துயர் வராமல்
மானத்தோ டிருக்க லாமே!



## சுதந்திர மூச்சு

தமிழர்க்கு விடிவென்று பாடு இனித்
தூய நம் கொள்கைக்குத் தீங்கில்லை ஆடு
அமைதியை ஈழத்திற் சூடு எங்கள்
அன்னையாம் நாடிதைக் காத்திட ஓடு

அடிமையென் றின முண்டோ தம்பி நாம்
ஆயிரம் ஆண்டுகள் அழுவதோ தேம்பி ?
விடிவுண்டு என நீயும் நம்பி நம்
விலங்கினை உடைக்காமற் கிடப்பதோ சோம்பி?

புத்தரின் போதனை எங்கே - அப்
புனிதரை உயிருடன் புதைத்தனர் இங்கே
சத்தியம் அகிம்சையா உண்டு நம்
துயரினைக் களைந்திடச் செய்பல தொண்டு!

ஜனநாயகம் என்கின்ற பேச்சு நாம்
எல்லோரும் முட்டாள்கள் என்றாகிப் போச்சு
இனமொன்றின் சுதந்திர மூச்சு அது
எம்மவர் வாழ்வுக்கு வழி சமைச்சாச்சு!

உரிமைகள் இல்லாத நாடு நம்
இனமிங்கு வாழ்ந்தால் எப்போதுங் கேடு
சிரமத்தைக் களைந்திடக் கூடு நம்
தேசத்தைக் காத்திட ஓடுநீ ஓடு!



## பாப்பாவுக்கு மாமா தரும் பாடல்

இளைய தலைமுறையே- நாட்டின்
இணையற்ற செல்வங்களே
அளையில் நண்டெனவே - நீங்கள்
இருப்பதில் லாபமில்லை!

உங்கள் கைகளிலே - இந்த
உலகைத் தாங்குங்கள்
தங்கத் தாத்தாவாம் - காந்தி
தனைப்போல் வாழுங்கள்!

கல்விக் கடலெனவே-நீங்கள்
காலத்தால் மிளிருங்கள்
நல்லவராய் உங்களை-இந்த
நாட்டில் நிறுத்துங்கள்!

வல்ல பரம்பரையை - இந்த
வையத்திற் தாருங்கள்
பொல்லாங்கு செய்வோரை-இந்தப்
பூமியில் எற்றுங்கள்!

பெற்றோர் மனங்குளிர - நம்
பெரியோர் வழிநடந்து
நற்குல மாடுங்கள் - தாய்
நாட்டை வணங்குங்கள்!

வறுமை எம்மினத்தை - இங்கே
வாட்டிட வல்லவனோ
பொறுமை எதற்கிதிலே - அதனைப்
பொசுக்கிட முந்துங்கள்!

யுத்தம் தருமனர்த்தம் - கண்டு
யாரும் கலங்காதீர்
சித்தங் கலங்குவதோ - வீரத்
தமிழர் நாமல்லவோ!

கல்விப் பருவத்திலே - உழைப்பிற்
கவனம் செலுத்துவதோ?
செல்வத்தில் ஆசை வந்தாற் கல்வி
சிதைந்திடும் அறியீரோ?

ஒழுக்கந் தனையென்றும் - உங்கள்
உயிரெனப் போற்றுங்கள்
அழுக்குப் படியாமல்-உடல்மனம்
இரண்டையும் காத்திடுங்கள்!

அதிகாலை வேளையிலே - நீங்கள்
ஆர்வத்துடன் விழித்தெழுங்கள்
புதிதான பாடங்களை - நீங்கள்
புரட்டிப் படித்திடுங்கள்!

வீடும் வெளிப்புறமும்-சுத்தமாய்
வைத்திருக்க நலம் பயக்கும்
கேடொன்று சூழ்வதில்லை-நோய்க்
கொடுங்கோலன் போயொழிந்தால்!

நகத்தினை வளர்ப்பது நம்-சுய
நலத்துக்குக் கேடுதரும்
அகத்திலே அறிவிருந்தால் - நலம்
அத்தனையும் தேடிவரும்!

அளவாக முடிவளர்த்தால் - முகம்
அழகுடன் திகளாதோ
பழக்கத்திற் பண்பிருந்தால் - யார்க்கும்
புறந்தள்ளல் எழிதாமோ?

உண்மையைப் பேசுவதால் - இந்த
உலகத்தில் உயர்வு வரும்
தண்மையாய் நீ நடந்தால் - பகை
தானே விலகி விடும்!


கொடுமையைத் தோற்றுவிக்கும் - பெரும்
கோபமே பாவமன்றோ
அடிமையென் றினமிருந்தால் - அதில்
இறப்பது லாபமன்றோ!

பெரியோர்க்கு மதிப்பளிப்போம் - புகை
பிடிப்பவர் தனை வெறுப்போம்
நரிபோலக் கேடு செய்வோர் - தமை
நையப் புடைத்திடுவோம்!

பாடசாலை செல்வதும்-விரும்பிப்
பாடங்களைப் படிப்பதுவும்
தேடரிய பாக்கியமாம்-காலம்
திரும்பி வருவதில்லையே!

மதுவை விலக்கிடுவீர்-அது
மதியை மயக்கிடுமே
முதுமை அடையுமுன்னே-வாழ்வை
முற்றும் கெடுத்திடுமே!

திருட்டும் கொலைவெறியும்-உன்னைச்
சிறையினில் அடைத்துவிடும்
இருட்டு அதிலிருக்கும்-பல
இன்னல்கள் உனைவருத்தும்!



# மயக்கந்தரும் பெண்மை

காதலெனும் போதைக் கடலினில் மூழ்கிநான்
கவிதைகள் பாடு கின்றேன்
கன்னியர் தனையெந்தன் கனவினிற் பார்த்திடக்
கண்களை மூடு கின்றேன்
மாதர்கள் பார்வையில் மனதைத் தொலைத்து நான்
மறுபடி தேடு கின்றேன்
மனதின் மகிழ்ச்சியே மலர்க்குலந் தானென
மாதர்பால் ஓடு கின்றேன்
போதை மிகுந்திடப பாதை தவறிநான்
போவது எத் திசையோ?
பள்ளமும் மேடுமே பரமன் படைப்பதிற்
பார்வையை நாட்டு கின்றேன்
வேதனை போக்கி மகிழ்ச்சியைத் தந்திட
வந்திடு மாத ரசே
வேண்டிய மட்டும் அனுபவிப்போம் கனி
வாயிதழ் தாருங்களே!

அழகுகள் சுமந்திட்ட அணங்கவள் முன்வர
ஆடவன் கற் சிலையோ?
அசைவுகள் தருகின்ற ஆயிரமாயிரம்
அழகுகள் கலை யிலையோ?
பழகிடும் பெண்மையிற் பழமெனச் சுவைதனைப்
புதைத்தவன் நிலை எதுவோ?

பாடலு மாடலும் சுவை அதைவிடச்சுவை
பாவையர் சுவை அல்லவோ
தழதழ உடல்தரும் சாகச லீலைக்குத்
தரணியில் விலை எதுவோ?
தங்கமும் வைரமும் தரும் பெறுமதி யெழில்
மங்கைக்கு ஈடாகு மோ?
குழைவுகள் கூட்டியும் இளமையைக் காட்டியும்
குமுதவாய் மொழி பகரும்
அழகிகள் இருவிழி யாடையை எந்தன் மேல்
எறிவது சுகஞ் சுகமே!

வேல்விழி நூலிடை வெட்கந் தரும்நடை
வஞ்சிக்கு அழ கதுவே
வீணையின் நாதத்தை விஞ்சிடும் தேன்மொழி
மனதுக்குச் சுகந் தருமே
பால்நிற அங்கங்கள் பாவலன் உள்ளத்தில்
பாடலைக் கொணர்ந் திடுமே
பனிதரும் குளிரிலும் புதுச்சுகம் பாவையர்
அங்கத்தைத் தொட வருமே
கால்வனை தருமொலி காதலைத் தருமொழி
காவிய அரிச் சுவடி
கலகலவென வரும் நகையிலே எந்தன்
கவலைகள் பறக்கு மடி
சூலறி மற்கையர் பாலொடு பழமெனச்
சுவைத்திட வரு வாரோ?
தேவைகள் யாவையுந் தருவதில் பெரிதெனுந்
தடையெதும் உள தாமோ?

வசமான பின்னரும் வேண்டாமோ மாதென
வெறுத்திட முனிநாளோ?
விடியாத இரவிலே முடியாத சுகங்களை
வேண்டுவேர் குறை வாமோ?

கசப்பான வாழ்வையும் ருசிப்பாக மாற்றிடும்
காதலே அருகில் வா
கோடையின் வரட்சியில் கொட்டிடும் பனியெனக்
குளிர்ச்சியைத் தா தா தா
நிசமான காதலில் நிலையாது மோதலே
நினைவிலே கொள் வாயே
நமனெமை அணுகிடும் நாள்வரும் முன்னரே
நெருங்கிட நினைப் பாயே
இசையான பெண்மையே வசைபாடு வோர்கள் தாம்
இவ்விடம் எதைக் கண்டார்?
இயலாத பேர்களே இனிமைசேர் காதலை
எதற்கென வெறுக் கின்றார்!

ஆதாரம் பெண்மையே சேதாரம் தந்திடும்
காதோரம் அன்பு சொல்ல
ஆகாயம் பூமியும் அன்பினைக் கொள்ளுதே
அடிவானம் நோக்கு மெல்ல
மாதரார் இல்லையேல் மகிழ்ச்சிதான் இல்லையே
மனதினை மாற்று அன்ன
மலைநதி கடல்களும் மணியணி பொன்களும்
வாய் பேசும் பொருளே அல்ல
வேதாக மங்களும் தீதாகிப் போகுமே
வஞ்சியர் காதல்தற்ற
வேண்டாமே காதல் தான் வேண்டாமே என்பவர்
வாழ்க்கையை என்ன சொல்ல?
நீதானென் காதலே நீயின்றி வாழ்விலே
நெருங்கிவா எந்தன ருகே
நேசமே வாசமே பாசமே மோசமே
நீயிலா வாழ்க்கை இங்கே!

கட்டிலிற் சுகமின்றித் தொட்டிலின் சுகமில்லை
கேட்பவர் கேழுங் கள்
காதல் கசந்தடிற் காடே புகுந்துடன்
ஞானியர் ஆகுங்கள்
பொட்டிட்ட மங்கையர் இட்டமோ சென்றுநீர்
போர்க்களம் காணுங்கள்
பூமியிற் பெண்ணினம் தாய்மையென் றான பின்
பார்த்தியே கொள்ளுங்கள்
மட்டிலா ஆண்டவர் மகளிரைத் தந்துனான்
மனதினாற் போற்றுங்கள்
மாதரார் யாவரும் மாயையென் றோதுவோர்
மூடரென் ரெள்ளுங்கள்
கட்டழகிகள் கண்டு காதலே கொள்ளாத
காளையர் உண்டாமோ?
காண்போம் சகம்பல கட்டையில் ஏறுமுன்
காதலே வேதமன்றோ!

மதுவிலே வைத்ததோர் மயக்கத்தை ஆண்டவர்
மாதரில் வைத்துள்ளான்
மனிதர்க்கு மகிழ்ச்சியை மயக்கத்தில் வைத்தவன்
மறைந்துதான் நின்றுள்ளான்
எதுஅவன் தந்ததோ அதுவொரு நாளிங்கு
இறப்பது நிசந்தானே
இருக்கின்ற நாள்வரை இகத்திலே மகிழ்ச்சியோ (டு)
இருப்பது முறைதானே
முதுமையை எங்களின் முடியிலே காட்டுமுன்
மணமகள் ஆடுங்கள்
மாலையை மாற்றுங்கள் மனைவியென் றாக்குங்கள்
மஞ்சத்தில் ஏறுங்கள்
பதுமைக்கு உரிமைகள் பாதியைக் கொடுப்பதில்
பரவசங் கொள்ளுங்கள்
பாடுங்கள் ஆடுங்கள் பெண்மையெனும் மதும்
போதையை மதியுங்கள்!

## மீட்பர் யேசு


மக்களின் மேய்ப்பர் மாண்புறு மீட்பர்
மண்மகள் பெற்ற யேசுபாலர்
அக்கிரமங்களை அவனியில் ஒழித்திட
அவதரித்தார் அந்தக் கருணைவள்ளல்

அன்பு, கருணை, இரக்கம் என்ற
அருமை கருத்தினை அவர் விதைந்தார்
துன்புறுவோரெலாம் தன்னிடம் வந்தால்
துயர்களைவே னென அவர் மொழிந்தார்!

பரிசுத்த ஆவியால் நிறைக்கப் பெற்ற
பாலகன் யேசு இவராவார்
அருமைப் பெற்றோர் யோசெப் மரியாள்
இருவர் தந்த சேயாவார்!

நோய்களைத் தீர்த்தும் பேய்களை மாய்த்தும்
நேசம் கொண்டார் எம்மினத்தில்
மேய்ப்ப னில்லாத மந்தைகள் எம்மை
மீட்டிட இரத்தம் சிந்தினரே!

சிலுவையிற் தன்னை அறைகையிலும் எங்கள்
சிறுமதி போக்கிட வேண்டியவர்
உலகை விட்டிவர் உயிர்போன பின்னும்
உயிர்த்தார் மூன்றாம் நாளிலிவர்!



## கடவுள்கள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
நோய்வந்து விட்டால் வைத்தியர் தெய்வம்
தாயெனத் தோன்றித் தலைமாட்டில் நிற்கும்
தன்னல மற்றோரே வைத்தியர் என்போம்.

உயிர் வாழ ஆசை உள்ளவர் எல்லாம்
உடல் மீது பற்றுக் கொண்டவர் அன்றோ
பயமேது இங்கு பிணிதோன்றி விட்டால்
பரியாரி பல்லோர் பிணிதீர்க்க உள்ளார்.

மருந்தினால் நோய்கள் மறைவது பாதி
மனித நேயத்தால் மறைவது பாதி
கருமத்தை உணர்ந்த மருந்துவர் தன்னைக்
கடவுள்கள் என்றே கருதுதல் செய்வோம்.

வியாதியால் இங்கே வருந்துவோர் கோடி
வைத்தியர் உயிரை மீட்கிறார் ஓடி
கயவர்க்குக் கூட உயிர்தந்து செல்லும்
சமுதாய சேவகர் வாழ்க வாழ்கவே

பற்பல நோய்கள் பிறப் பெடுத்தாலும்
பகலவன் முன்னே பனியென மறையும்
நற்நிறம் படைத்த டாக்டர்களா
நாட்டில் அவர்கள் நீழே வாழ்கவே.

வாழ்க வைத்தியர் வாழ்க வைத்தியர்
வாதை அகற்றிடும் வைத்தியர் வாழ்கவே
நீள் புவி தந்த சுகங்கள் அனைத்துமே
நிறைந்து நோய் தீர்க்கும் வைத்தியர் வாழ்கவே



## நவராசா

கடமையிலே பற்றுவைத்துக் காலை வேளை
கருத்தையும் அதில்வைத்து வழமை போலே
திடமனம் வைத்திருக்க விரைந்து வந்த
செய்தியென் இதயத்தைச் சுட்டெரித்து
விடமெனத் தாக்கியது மயக்கஞ் தானும்
வந்ததுந் வெட்டுண்டாய் என அறிந்தே
உடந்தான் நடுங்கியதே ஐயோ நண்பா
உனக்கா இந்நிலை இல்லை இருக்காதென்றேன்


சிம்மத்தைச் சிறுநரியா தாக்கக் கூடும்?
சோம்பலா துணிவுக்குத் தீனி போடும் ?
பொம்மையா உயிரியைக் கொல்லும்? கூட்டும்
பொய்மையா உண்மையை வெல்லும்? இங்கே
சும்மா வெறும் கதையளக்க வேண்டா மென்றேன்
துடிக்கின்ற மனத்தோடு சொன்னான் நீயும்
நம்பாயோ இதுவுண்மை உண்மை என்றான்
நவராசா வெட்டுண்டான் என்றே சொன்னான்.

ஓடோடி வந்தேன் நான் உன்னைப் பார்க்க
இதயத்தைத் துயரென்னும் உணர்வு தாக்க
ஈடாடி நின்றிருந்த கூட்டத் துள்ளே
இரத்தங் குளித்தவனே உன்னைக் காணேன்.
தேடினேன் இரணசிகிச்சைப் பிரிவும் உந்தன்
இரத்ததை ருசிபார்க்க அழைத்த தென்றே

கூடிநின் றிருந்தவர்கள் உரைத்தார் கொடிய
கூற்றுவனும் அங்கே தான் இருந்தான் போலும்.

எப்பாடு பட்டாயோ? அறியேன் இந்த
இளவயதில் மரணத்தை அடைந்து விட்டாய்
அப்பாடு என்னுயிரைக் கொல்லும் உன்போல்
உயிர்நண்பன் தனையிங்கு எங்கே காண்பேன்.
தப்பேதும் அறியாத உன்னை என்றும்
சாவதற்கு விடமாட்டேன் கவிதை கொண்டு
எப்போதும் நீயிங்கே இறவா வாழ்வை
எய்துதற்கு வழிசெய்யர் கவிதை செய்தேன்.
கோழைகள் என்றொரு காலத்தில் நாமிங்கு
வீரத்தின் விளைநிலமே நல்லோர் போற்றும்
விவேகத்தின் உறைவிடமே வசையொன் றில்லா
ஈரத்தில் மிக்கவனே எல்லோர் பாலும்
இரக்கமே கொள்கின்ற உன்னை நண்பா
கோரத்தின் பிடிக்குள்ளே சிக்க வைத்து
கொடியவர்கள் வெட்டியே கொன்று தீர்த்தார்
யாருக்கும் அஞ்சாத சிங்கம் தன்னை
நாய் கௌவ்விக் கொன்று விடல் விதியேயன்றோ.

கடமைக்கு நீ சென்று திரும்பும் வேளை
காலையிலே குடியிருப்பொன் றில்லா ஊரில்
மடமைக்குத் தீமூட்டும் மனிதன் உன்னை
மறித்துத்தம் பகைதீர்க்கும் மூடர் தாக்க
உடைமையை நினைத்தாயோ? உற்றார் தன்னை
உதவிக்கு அழைத்தாயோ? ஐயோ நண்பா
கடவுளை நினைத்தாயோ? மனைவி பிள்ளை
கஷ்டத்தை எண்ணியெண்ணி உயிர் விட்டாயோ?




## சுதந்திரம் வருமா

கூடிக் குடி செய்த துண்டு-இனிக்
கோழைகள் நாமில்லை இங்கு
ஊழை நினைந்து ஒடுங்கிக் கிடந்தவர்
ஒன்றுபட்டோம் அது வெற்றி-இனி
ஒழிப்போம் பகையை எற்றி!

பட்டம் பதவிகள் பெற்று உயர்ந்திடப்
பாடுபட்டதொரு காலம் - இது
பகைவர் சூழ்கின்ற காலம்
கொட்டம் அடிப்பவர் திட்டந் தனைநாங்கள்

மொட்டை அடிப்பது திண்ணம் - பகை
பார்க்கட்டும் எங்கள்கை வண்ணம்!

ஜாதி மடமைகள் பேசிக் கிடந்தனர்
நாட்டிலே நம்மவர் முன்பு - இன்று
நம்முள் முளைத்தயத அன்பு
பாதி வழியிலே கண்விழித்தோம் பெரும்
பாதகம் சூழ்ந்திடக் கண்டோம் - இனிப்
பாத்திரம் ஏந்திநாம் தண்டோம்!
வஞ்சரை கெஞ்சிநாம் வாழ்ந்தது போதும்
வாங்கச் சுதந்திரம் கூடி-நீங்கள்
வந்து குவியும் ஓடோடி
தஞ்சம் எமக்குத் தைரியம் வேறல்ல
சாத்திரம் பார்த்திட லாமோ-பார்த்தால்
சுதந்திரம் வரு மாமோ?



# கட்டுப்பாடு அவசியம்

கட்டுப்பாடது தட்டுப்பாடெனக்
கால் செலும் வழி
போவமோ?
கெட்டுப் போவதைக் கட்டுப் பாட்டினால்
வெட்டி வீழ்த்துதல்
பாவமோ?

ஓட்டு மொத்தமாய்ப் பட்டுப் போகுமோ
எம்மினம்? இதில்
லாபமோ?
கட்டுப் பாட்டினை ஏந்தி எம்திருக்
காளை கன்னியர்
வாழுமோ?

கட்டுப்பாடது தேவை இல்லையேல்
கெட்டுப் போய்விடும்
நாடடா
இட்டம் போலவே வாழ்தல் தீமையே
என்று நீதினம்
பாடடா?

சட்டம் என்பதும் கட்டுப் பாடெனும்
தெளிவு நாம்பெற
வேட்டுமே
அட்டி இன்றிநாம் வாழ எண்ணினால்
சட்டமும் எமைத்
தீண்டுமே!

தர்மம் என்பதும் மனதின் போக்கினைத்
தடைகள் செய்யவே
வந்தது
கர்மம் யாவிலும் தடைகள் உண்டதைக்
கால தேவனே
தந்தது!

பெருகுந் தீமைகள் குறைய முன்னவர்
பண்ணி வைத்தனர்
தர்மத்தை
பெருமை பெற்றிடத் தடையை மேவியே
புரிவோம் நாங்களெம்
கர்மத்தை!

தாலி என்பது வேலி என்றொரு
தடையை வைத்தனர்
இல்லையா?-அதைக்
கேலி பேசிய மாதர் வாழ்க்கையில்
கேடு சூழ்ந்ததா
இல்லையா?

கோடு தாண்டிய சீதை வாழ்க்கையில்
        கண்ட யாவையுந்
        துன்பமே
ஆடு மேய்ந்திடும் பயிரைத் தோட்டத்து
        அடைப்பு வேண்டுதும்
        என்பமே!

வந்த நோயினைப போக்க ஓடைதம்
        நொந்தவர் பெறும்
        தடையடா
சொந்த நாட்டினைக் காக்க வல்லவர்
        அந்த நாட்டவர்
        படையடா!

ஓடும் வண்டியை நிறுத்த அதற்குமோர்
        விசை உள்ளது
        பிறேக்கென
கேடு நீங்கிடச் சூடிக் கொள்ளுவோம்
        கட்டுப் பாட்டினை
        அதற்கென!

நாய்க்குச் சங்கலி புலிக்குக் கூடென
        நாம் அமைத்ததை
        உள்ளுவோம்
நாக்கு உருசியை வேண்டி ஒவ்வா உணவை
        வாய்க்குள்த் திணிப்பதைத்
        தள்ளுவோம்!

இல்லறம் எனும் நல்லறம் இங்கு
என்றுமே கட்டுப்
பாட்டிலே
எல்லை அற்றதோர் சுதந்திரம் எனில்
இன்பம் ஏதடா
வீட்டிலே?

## காதல் ஒரு வேதம்

காத லென்பது காசு அற்றது
காவியப் படி
ஆகிடு
மாத ராரோடு மோத லாடுமோ?
மாவலி அதில்
நீவிடு!

நேச மாகவே வாழ முந்திடு
நற்குடி எனப்
பேரெடு
நீசனெ ன்பதை நாடு ஏற்குமோ?
நிந்தனைச் செயல்
நீவிடு!

குங்குமக் கலை மங்கலக் கலை
தங்கி நிற்பது
காதலே
நங்கை யர்களில் நம்பியர்க் கொரு
நாட்டமே தரும்

காதலே!
ஏழை என்பதும் ஜாதி பாரப்பதும்
ஏற்றமே தரும்
காதலே!
ஊழை வென்றிரு கானை கன்னியர்
உள்ளுனர் வது
காதலா?

நாடு வென்றவர் கூட நல்லின
நங்கை யர்களிற்
தங்கினார்
ஈடு இல்லையே இவ் வெழிற்கென
இங்கு பற்பலர்
ஏங்கினார்!


நஞ்சு உண்டநம் கண்ட னோடுநற்
கொஞ்சு பார்வதி
இல்லையா?
மஞ்சு வண்ணனாம் மாயவன் துணை
வஞ்சி லக்சுமி
இல்லையா?

வள்ளியும் தெய்வ யானையும் வடி
வேலனார் பெற்ற
காதலி
உள்ளுவாய் ஒன்றில் ஒன்று கூட்டுவாய்
இரண்டு மொன்றிடக்
காதலி!

மோசமானதா காதல்? இல்லை யோர்
வேதமென்று தான்
ஆனதே

தேசமெங்கணும் பாச மற்றவர்
தேம்பிடும் நிலை
தோணுதே!

ஆசை மேவிடக் காதல்? செய்தலை
இங்கடக் குதல்
குற்றமே
வாச நெய்க்குழல் வஞ்சியர் பலர்
வாழ்வை மாய்த்திடல்
செற்றமெ!



## கசிப்பினை ஒழிப்போம்

கசிப்பினை ஊர் ஊராகக்
காய்ச்சிட அதனை மக்கள்
பசுவதன் பாலே போன்று
பருகிட முயலு கின்றார்
விடமெனக் கசிப்பை யாரும்
விலக்குதல் காணோமிங்கே
நசையற இவர்க்கு நீயும்
நல்லருள் பொழிவாய் கண்ணா!

அரக்கனாம் கசிப்பை இங்கே
அருந்தியே உயிரை மாய்க்கும்
தரங்கெட்ட மனிதர் செய்கை
சமுதாய நலன் கெடுக்கும்
பெருமைசேர் தமிழர் வாழ்விற்
புகுந்ததே கசிபபெனும் பேய்
இரங்கியே வந் திவர்கள்
இன்னலைக் களைவாய் கண்ணா!

அழுகிய பழமும் ஈஸ்றும்
இரும்பியும் இட்டுக் காய்ச்சும்
கழிவுநீர் தன்னை இங்கே
கசிபபென விற் கின்றார்கள்

மழுங்குதே நற் குடும்பத்து
மனைகளில் இன்ப வாழ்க்கை
அழியுமோ தமிழினம் தான்?
இதைக் தடுத்திடவா கண்ணா!

தானன்றி மனைவி மக்கள்
சமுதாயம் அனைத்தும் வீழ
ஆனந்தம் கசிப்பே என்று
இருப்பதை விற்றுச் சுட்டு
ஈனராய் இருக்கத் தானே
எம்மினம் விரும்பு கின்றார்.
கூனியே தோன்றும் எங்கள்
குலத்தினைக் காப்பாய் கண்ணா!

உழைக்கின்ற பணத்தைக் கொண்டு
உடல்நலம் பேணல் விட்டு
அழைத்திடாக் கசிப்பை நாடி
ஈயெனப் போய் விழுந்து
இழைத்து நோய் சுமந்து இங்கே
உயிரையுந் திறக்கு மெங்கள்
பிழையுன ராத மக்கள்
படுந்துயர் காப்பாய் கண்ணா!

சோற்றுக்கே வழி இல்லாமல்
தங்கநற் குடி லில்லாமல்
மாற்றியே உடுக்க ஆடை
மனைவிக்கும் குழந்தை கட்கும்
ஏற்றதா யில்லை இந்த
அழகிலே குடும்பம் செய்தால்
போற்றுமா உலகம்? இவர்கள்
பிழைத்திட வழிசெய் கண்ணா?

சமுதாய அழிவை நாடித்
தாம்வாழக் கசிப்பைக் காய்ச்சும்
தழிழர்கள் மனிதர் தாமா?
தீய்கவே இவர்கள் வாழ்வு
மதைகள் ஒழிய வென்றே
மனிதர்கள் வாழ இன்றே
இமைக்கு முன் ஓடி எங்கள்
இருப்பிடம் வாராய் கண்ணா!

பணமொன்றே நோக்கம் மக்கள்
படுந்துயர் அறிந் திடாதார்
கணமேனும் அறிஞர் நூல்கள்
கற்றிட முயற்றி டாதார்
உணராதார் பிழைகள் யார்க்கும்
உயர்ந்த நோக்கங்கள் இல்லார்
தணலாகிக்கக் காய்வாா தம்மைத்
தகித்திட வாராய் கண்ணா!

நாட்டிலே தூணே போன்ற
நலஞ்சான்ற இளைஞர் யாரும்
கேட்டிலே விழு கின்றார்கள்
கசிப்பதன் பழக்கத் தாலே
ஈட்டிய பொருட்கள் தாணும்
இழிசெயல் மனிதர்க் கென்றால்
நாட்டிலே நல்லோர் வாழ்வு
நரகமோ சொல்வாய் கண்ணா?

## மனநீதி வேண்டும்

சீதனக் கொடுமை இந்தத்
தேசத்திற் தமிழி னத்தில்
வேதனை கொடுக்கு மொன்றாய்
விளங்கிடக் கண்டோ மிங்கே
சூதென விளங்கு மிந்தச்
சீதனக் கொடுமை போக்கி
மாதர்கள் துயர் துடைக்க
மனநீதி உண்டோ தம்பி?

வெட்கமே அடைவோ மிங்கே
வாழாமற் தங்கை மார்கள்
பட்டியில் மாடுகள் போல்
பகலிலும் இரவிற் தானும்
கட்டிலின் சுகத்தை எண்ணிக்
கனவுகள் காணு கின்றார்
பாட்டிட் டவளுக் கென்றும்
புருசனாய் ஆவாய் தம்பி!

பட்டியல் போட்டுப் பிறரின்
பொருளினைப் பறிக்கும் தங்கக்
கட்டிகள் கேட்கும் இந்தக்
கண்கெட்ட சமுதா யத்தைத்

தட்டியே நிமிர்த்த நல்ல
தாரமாய்த் தேர்ந்து நீயும்
கட்டிக்கொள் அவளை உந்தன்
கண்ணெனக் காப்பாய் தம்பி!

சீதனம் எதற்கு? ஆண்மை
செத்ததா உன் தேகத்தில்
காதலைக் காசு கொண்டா
கட்டிநீ எழுப்ப வேண்டும்?
தீதடா சீதனப் பேய்
சிறுமைக்கு உன்னைத் தள்ளும்
மாதுநின் னாவி அவளை
மணஞ்செய்து காப்பாய் தம்பி!

பெற்றவள் மனம் நோகாமற்
பேராசைக் கிடம் கொடாமல்
சிற்றள வேனும் மனிதத்
தன்மையை வெளிக் கொணர்ந்து
நற்குலப் பெண்ணை இந்த
நாளிலே சேர்த்துக் கொள்வாய்
கற்கண்டைச் சுவைக்கக் காசு
கேட்பது எதற்கோ தம்பி!

உழைக்கின்ற வழிகள் நூறு
உண்டிந்த மா நிலத்தில்
தழைக்கின்ற காதல் தன்னைத்
துயருறும் மாதர்க் தீய்ந்து
பிழைத்திடு வர தட்சனையைப்
பூவெனத் தூக்கி வீசு
அழகியநம் மாதர் தம்மை
ஆள்வது யாரோ தம்பி!?

திருமண வயது உன்னைத்
தொட்டபின் வாழ்வு தேடு
பருவத்தே பயிரைச் செய்து
பிள்ளையாம் பலனைத் தேடு
கருமத்தை முடிக்க ஏற்ற
காலத்தை நிச்ச யித்து
வரதட்சனைக் கொடுமை தன்னை
வீழ்த்திடச் செய்வாய் தம்பி!

உனக்குத்தான் தங்கை உண்டு
அவள்வாழ வேண்டு மென்று
மனத்திலே துயரங் கொண்டு
வாழ்கிறாய் அறிவே னிங்கு
தனத்திலே குறியாய் நிற்கும்
சமுதாயத் கொடுமை போக்கு
மனத்துயர் போகுந் தம்பி
மகிழ்ச்சியாய் வாழ்யாய் என்றும்!

விலைபேசி வீட்டா ருனனை
விற்றிட நீயும் அந்த
நிலையினை ஏற்றுப் பாழும்
நரகிலே வீழ லாமோ?
இலையொரு மான மென்றே
விலைதரு பொருளே யாவாய்
வலிவுடை மனித னென்றே
வாழ்ந்துநீ காட்டு தம்பி!

உனக்கொரு இலட்சியத்தை
உறுதிசெய் சீத னத்தை
மனத்தினாற் கூட எண்ணி
மகிழ்வது இல்லை யென்றே
கனிக்குல மழுங்கிப்போனாற்
கேவல மெம்மைச் சூழும்
இனநலம் பேணல் வேண்டும்
இதுவுந்தன் கடமை யன்றோ!



## சாதிய வரலாறு

கல்தோன்றி மண் தோன்றாக்
காலமதில் வந்தவர் நாம்
வில்தோன்றாக் கால மதில்
வேவெவராய் வாழ்ந்த
அல்தோன்றி எம் முளத்தில்
ஒளிபுகா திருந்த வேளை
பல்தோன்றி வந்த சாதிப்
பெயெம்மைத் தீண்டி யதே!

சுந்திரத் தமிழி னத்தைச்
சிறந்ததச் சாதிப் பேயே
மந்தைகள் போலே வாழ்ந்த
மக்களிற் சாதிச் சாத்தான்
முந்தைய காலஞ் தன்னில்
மோதிற்று ஆதனாலன்றே
நிந்தையாம் பிரிவினைக்கு
நிலைக்கள மானோம் நாங்கள!

இடையிலே தோன்றி மக்கள்
உளத்திலே வேர்விட் டூன்றி
வடுவெனத் தமிழர் வாழ்வில்
வளர்ந்திட்ட சாதி யத்தால்

கொடுமைகள் ஒன்றே கண்டோம்?
　　கேடெனும் சேற்றை உண்டோம்
தடையிதற் றிடுவொம் நல்ல
　　சமுதாயம் தனை வேண்டி!

உரமிட்டு நாம் வளர்த்த
　　உரப்படாச் சாதி நாட்டின்
பரமெலாம் பரவி எம்மிற்
　　புகுந்தது மநு வகுத்த
வருணங்கள் நான்காம் பிரமான
　　சத்திரிய வைஸ்ய சூத்திர
கருமங்கள் நான்கைத் தானக்
　　சாலத்தில் வகுத்த னராம்

காலத்தின் போக்கால் மக்கள்
　　கண்டநற் றொழில்கள் யாவுந்
சாலதீச் காதிய மாய்த்
　　தழைத்ததாம் அறிதல் வேண்டும்
மூலத்திற் சாதி யில்லை
　　மறுசெய்த பகுப்பு ஈதே
ஞாலத்திற் தமிழர் யாரும்
　　நலிவதோ சாதியத்தால்?

தீண்டாமைச் சுவர் எழுப்பி
　　தமிழினம் ஒன்றை ஒன்று
வேண்டாதார் போலே தம்முள்
　　விரோததைத வளர்த்த துண்டு
ஆண்டுகள் பல கடந்தும்
　　அடிப்படை மறைய வில்லை
ஈண்டுநாம் சாதிப் பேயை
　　ஒழித்திட உறுதி கொள்வோம்

ஒற்றுமை குறைந்த தாலே
எம்திரு நாட்டிலே வந்து
பற்றவர் கால் மிதித்தால்
போரிட்டு எமை ஜெயித்தாள்
வெற்றியை இழந்த தன்றி
வந்தவர்க் கடிமை யானோம்
குற்றமே இழைத்தோம் சாதிக்
கொடுமையாற் பிரிவு கண்டே!

பஞ்சமர் என்ற வர்க்குப்
படித்திட உரிமை இல்லை
பஞ்சமர் பாத அணியும்
போட்டிட இயைவு மில்லை
தஞ்சமே என்று தங்கள்
தயவினில் வாழச் செய்தார்
வஞ்சார் மானங் காக்கும்
ஆடைக்கும் அள விட்டாரே!

கிணற்றிலே தண்ணீர் அள்ளக்
கீழ்சாதி மறுக்கப் பட்டார்
பணந்தந்து கடையிற் தேநீர்
பருகுதல் குற்றம் என்றார்
இணங்கிடார் வண்டி ஏறி
ஆசனத் தமரக் கீழோர்
குணங்கெடு மேலோர் சாதிக்
கோபுரத் தேறி நின்றார்!

ஆலய வழி பாட்டிற்கே
எத்தனை தடைகள் இட்டார்
ஓலமே உடைய வாழ்வை
இழிந்தவர்க் கென்றே வைத்தார்

மேலவர் என்று தம்மை
மேதினிக் கெடுத்துக் காட்டிச்
சீலமே இன்றி வாழ்ந்தோர்
செயலது நல்ல தாமோ?

சிறந்த நல் வீடு கட்டச்
சிற்றினம் தடுக்கப் பட்டார்
இறைந்தவர் தமக்கு கூட
இடுகட்டிற் பிரிவ வைத்தனர்
பிறப்பிலே பேதம் சாற்றிப்
பெரியவர் னே வர்கள்
இறைவனைக் கூடப் பிய்த்து
இனத்துக்கு இனந் தந்தாரே!

திருமண வழக்கிற் கீழோர்
தங்களிற் தாலி கட்டல்
பெரும் ஆபத்து என்றோ
பண்ணினர் சட்டம் அன்று
ஒருவரும் நகை போடாது
இருக்கவும் வேண்டு மென்றார்
தருமமே தன்னைத் தின்ற
சாதிய வழக்கம் நன்றோ?

சாதியிற் குறைந்தவர்கள்
தோளிலே சால்வை போடல்
பாதக மாகும் சட்டை
பெண்களும் அணிதல் தப்பாம்
மாதவள் தாவணி தன்
மானத்தைக் காக்கப் போடல்
தீதெனப் புகன்றா சாதிச்
செருக்கிலே மிதந்தவர்கள்


கைகட்டி நிற்றல் வேண்டும்
காலபற்றி வணங்க வேண்டும்
செய்யென்று ஆணை யிட்டாற்
தீமையுந் செய்தல் வேண்டும்
உயர்கின்ற வழியோ இல்லை
உழைப்பவர் அடிமை என்றோ
வைராக்கியம் கொண்ட வர்கள்
வதைத்தனர் கீழோர் தம்மை

உயர்குலம் கொண்ட பேரை
இழிந்தவர் வைத்தல் தப்பு
சுயேட்சையாய்க் குளத்திற் கீழோர்
சென்று நீராடல் தப்பு
வெயிலுக்குப் குடை பிடிக்க
வேண்டாமே என்றார் அந்தக்
கயவர்கள் கொண்ட சாதிக்
கடும்பிடி தளர்ந்த திங்கே!

நிலைமையை உணர்வாய் தம்பி
நீண்ட காலங்கள் வெம்பிப்
புலம்பிய மனிதர் காணப்
புத்தொளி பிறந்த திங்கே
கலங்கிய கீழ்மைச் சாதி
கல்வியால் உயர்ந்து ஓங்கி
நிலமதில் வாழ்வு பெற்றார்
நீசர்கள் போய் மறைந்தார்!

இச்செயல் எது வரைக்கும்
　　இன்னலை வளர்க்கும்? எம்முள்
நிச்சயம் ஒழியும் சாதி
　　நல்லினந் தோன்றும் கல்வி
உச்சத்திற் தோன்ற அறிவு
　　உள்ளவோர் இனமும் தோன்றும்
அச்சோ வென்றன் றலறி
　　ஓடுமே சாதிப் பேடி!

அன்றைய சாதி வேகம்
　　அடங்கிய தின் றெனினும்
குன்றென நின்ற சாதி
　　பூண்டோடு ஒழிய வில்லை
வென்றுளோம் சிறிது ஆனால்
　　வேரொடு களைய வேண்டும்
ஒன்றெனத் திரள்வோம் சாதி
　　ஒழிந்திட முரசறைவோம்!



# அன்புக் காதலி

பூசைக் குரியவள் நீ - கலைப்
பொக்கிச வடிவினள் நீ
ஆசைக் குரியவள் நீ – என்
அன்புக் காதலி நீ


கோயிற் தேரடி நீ – எழில்
காட்டுந் தாஜ்மகால் நீ
தேவி வடிவடி நீ – மிகத்
தித்திக்கும் கனி நீ

பாலின் சுவையடி நீ – என்
பச்சைக் கிளியடி நீ
காசின் மதிப்படி நீ – என்
கண்ணின் கருவிழி நீ

நோய்க்கு மருந்தடி நீ – என்
நாட்டின் சுதந்திரம் நீ
தாய்கு மழலையைப் போல் - நான்
தாலாட்டும் சேயடி நீ

உழைப்பின் ஊதியம் நீ – என்
உதிரத் தணுக்களும் நீ
மழைக்குக் குடையடி நீ – என்
மனிதின் நிம்மதி நீ

வானின் நிலவடி நீ முட்டை
மஞ்சள் கருவடி நீ
ஊனில் உயிருளத்தில் - எல்லாம்
உறைந்து நிற்பவளே



குற்றங்கள் அற்றது வாழ்க்கையே அல்ல
குறுக்கதை நல்லவன் என்று ஊர் சொல்ல
பற்றுக்கள் அனைத்தையும் ஒழித்திடு மெல்ல
பாவங்கள் சேராத வாழ்க்கையைக் கொள்ள!

STP Computer World (Pvt.) Limited
54A, Palaly Road, Kantharmadam, Jaffna